தனிப்பிரதி 1 அணா வருட சந்தா ரூ. 5. REGD. NO. M. 4455.

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்
C. N, அண்ணாதுரை M. A.,

"தமிழ் எங்கள் இளமைக் குப்பால்!—இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!"

[கவி பாரதி தாசன்]

மலர் 1. || காஞ்சிபுரம் 5—4—42 விசு—பங்குனி 23உ ஞாயிறு || இதழ் 5

## "வந்தேனே! நானே!!"

பரதன்.

"காக்கையே! சனிபகவானின் பிரதிநிதியாக, நீகிளம்பு! சிவனாரின் பிரதிநிதியாக, காளையே நீகிளம்பு. நாயே! நீயும் நட. வைரவருக்காக, உனக்கு வருகிறது யோகம்.

பழங்கலத்தை உருட்டும் பெருச்சாளியே! பதுங்காதே, வாவெளியே, கணபதியின் பிரதிநிதியாக நீ புறப்படு.

குப்பையில் புரண்டு கிடக்கும் கழுதையே! நீயும் புறப்படு, நீதேவகானத்துக்குப் பிரதிநிதி என்று தெரிவித்துவிடு.

ரயில் பிரயாணத்திலே பெட்டியோ, கூஜாவோ, மூட்டை முடிச்சோ, திருடியவன், பிரயாணிகளின் பாதுகாப்புச் சங்கப்பிரதிநிதியாகக் கிளம்பட்டும்! உப்பு மூட்டையைத் திருடிவிட்டு, ஊராரிடம் உதைப்பட்டுக் கிடந்தவன் ஊர்காப்புச் சங்கத்தின் உன்னதப்பிரதிநிதியாகப் புறப்படட்டும். எட்டாவது கள்ள புருடனுக்காக, ஏழாவதுபேர் வழியை ஏமாற்றியவள் கற்புக்கரசிகளின் கழகத்தின் சார்பாகப் பேசுவேன்என்று சொல்லிக்கொண்டு, சுழல் கண்ணும், "ஷோக்" நடையும், உடன்வரக் கிளம்பட்டும். உச்சுக்குடுமிகள் நவநாகரிகத்தின் பிரதிநிதிகளாகவும், ஊசல் ஊறுகாய்க்கு ஒரு காதம் ஓடும் பேர்வழிகள் வள்ளல்களின் வார்சாகவும், கிளம்பட்டும். மூளையற்ற முத்தண்ணாக்களின் முழு அனுமதிபெற்ற ஏகப்பிரதிநிதி நானே என்றுரைத்துக்கொண்டு, பித்தன் புறப்படட்டும்," என்று வேகமாகவும் உக்கிரமாகவும் கூறினான் நண்பன்வீரன்!

"வீரா! கோபம்வரக் காரணமென்ன? காக்கையும் கழுதையும், நாயும் நாசகாலியும், பெருச்சாளியும் பித்தனும், பிரதிநிதிகளாகக் கிளம்பட்டும், என்று கூறுகிறாயே, என்னகருத்துடன் பேசுகிறாய், எனக்கும் பிறருக்கும் விளங்கக்கூறு. கோபத்தைக் குறைத்துக் கொள்" என்று நான் கூறினேன்.

"நண்பா, பரதா! நடந்தது என்னவென்று தெரியாதுபோலும். பத்திரிகைகளைப் பார்ப்பதில்லையோ?" என்று கேட்டான் வீரன்.

"பார்க்காமலென்ன?" என்று பதில்கூறினேன் நான்.

"நீபார்த்த இலட்சணம் தெரிகிறது. இதோபார். படி" என்றுகூறிக்கொண்டே, சுதேசமித்திரன் பிரதியொன்றை என்னிடம் கொடுத்தான். படித்தேன்.

"ஸ்ரீமான் ராமஸ்வாமி நாயகருக்குக் கட்சியேதுமில்லை. அவரை ஆதரிப்பவரும் கிடையாது. தென்னிந்திய பிராமணரல்லாதாருக்கு அவரல்ல பிரதிநிதி. நானேதான்"—என்று ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி மாஜித்தலைவர், ஸ்ரீமான் A. குப்புசாமி முதலியார், சர். ஸ்டாபோர்டு கிரிப்சுக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்."—என்று மித்திரனில் இருந்தது. வீரனுக்குக் கோபம் பிறந்ததன் காரணம், விளங்கிற்று. பார்ப்பனரல்லாதாருக்கு நான் பிரதிநிதி, என்று வேலூர் தோழர் குப்புச்சாமி கூறினதால், வீரன், காக்கை கழுதை, காலி கள்ளன், ஆகிய எதற்கும் பிரதிநிதி வேலைகொடுக்க முன்வந்தானென்பது விளங்கிவிட்டது.

உண்மைதானே! பார்ப்பனரல்லாதப் பெருங்குடி மக்கட்காக, தோழர் குப்புசாமி பிரதிநிதி என்று கூறத்துணியும்போது, அதிலும், பார்ப்பனரல்லாதாரின் கட்சியும், அதன் தலைவரும் இருக்க, அங்குலுண்டவோ, ஒதுங்கியிருக்கவோ, இடமும்பெறாது, அந்தக் கட்சியைக் கண்டபடி தூற்றிக்கொண்டு வாழும் ஒருவர், வெட்கமின்றி, நான்தான் பார்ப்பனரல்லாதாருக்குப் பிரதிநிதி என்றுகூறுவது துடுக்குக் குணந்தானே! பிரிட்டிஷ் பேரறிவாளிகளைத் திணறும்படிச் செய்த திறமும் தீரமும் பெற்றிருந்த டாக்டர் நாயர் என்ன! திக்விஜயம் செய்துத்தமிழரைத் தட்டிஎழுப்பி வெற்றிக்கொடி நாட்டி தமிழர் வெண்சாமரம்வீச கவர்னர் கைலாகுகொடுக்க ஆரியர்அஞ்சி ஒருபுறம் ஒதுங்கி நிற்க, அரசோச்சிய வீரத்தியாகராயர் என்ன! பாராளும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள்புகழத்தக்க ராஜதந்திர நிபுணராக விளங்கிய பனகால் அரசர் என்ன! இவர்கள் தோன்றியகட்சியிலே, எட்டுமுறை சிறைசென்று, கொட்டு முரசு தமிழா! என்றுமுழக்கி, கோல்கொண்ட ஆச்சாரியாரின் கோல் விழச்செய்து, தூங்கிய திராவிடரை எழச்செய்து, குகையைவிட்டு சிங்கம் கிளம்புவதுபோல், குடும்பங்களை விட்டுத் திராவிடத் தோழர்கள் வெளிவந்து, ஆள்வோரின் வெஞ்சினத்தைக் கண்டு, கலங்காது, சிறைசென்று மீண்ட, ஆயிரவருக்கு மேற்பட்ட அருந்தொண்டர் படையைத் திரட்டி,

வெற்றிகண்டபெரியார் என்ன! அவருக்குக்கீழ் தளபதிகள் பலர் என்ன! இத்தகையோரைப் பெற்ற, திராவிடத்திருக்குலத்தாருக்கு, இந்த ஆரியப் பாதந்தாங்கியா, பிரதிநிதி! நெல்லுக்குப் பிரதிநிதி பதரா! நீருக்குப் பிரதிநிதி சேறு? மலருக்குப் பிரதிநிதி கூளமா? தோழர் குப்புசாமியா, நமது சமூகப் பிரதிநிதி? என்ன நெஞ்சழுத்தம்! எவ்வளவு பித்தம். வீரன் கோபித்துக்கொண்டது தவறல்லவே. இந்தச்செய்தியைக் கேள்விப்படும், எவருந்தான் கோபிப்பர். நானும் கோபித்துக்கொண்டேன் முதலில், பிறகு, பரிதாபப் பட்டேன். ஆணவத்தின் ஆட்டத்தால், அவர் அதுபோல் கூறினர் என்றனர் நண்பர்கள். அது ஒரு நோய், என்று நான் கருதினேன், அவருக்காகப் பரிதாபமும் பட்டேன்.

வேப்பிலை எடுத்து அடியுங்கள்! மஞ்சள் நீரைத் தலையிலே கொட்டுங்கள்! சூட்டுக்கோலை எடுத்துக் காட்டுங்கள்! ஜாட்டை வாரை வீசுங்கள்! பாபம், அவரைப் பேய்பிடித்துக்கொண்டது. பித்தம் ஒருபேய் போன்றதே! அதனிடம் சிக்கினோர், பிதற்றுவர், ஏதேதோ பேசுவர். இந்தவேளையில், எப்படி இருக்கிறரோ தெரியாது. நிலைமை யாதாகி விட்டதோ! தலைகீழாக நிற்கிறரோ? தத்தோம்மெனக் குதிக்கிறரோ? நீரோடையில் புரள்கிறரோ? நானறியேன், அவரது இப்போதைய நிலையை.

எவ்வளவு பித்த முதிர்ச்சியில்லாவிட்டால் கூப்பிடுவாரற்றுக் கிடக்கும் அவர், அழைப்பைப்பெற்று, நமதுதலைவர், சர். ஸ்டாபோர்டு கிரிப்சைக் கண்டு பேசும் நேரத்திலே, பார்ப்பனரல்லாதாருக்கு நானே பிரதிநிதி என்றுரைப்பார் என்பதை யோசித்துப் பாருங்கள்.

வீட்டிலே பலர் விருந்துண்ண, புறக்கடை மேட்டிலே பன்றிகள் மலந்தின்னும் காட்சிக்கும், டில்லி நகரிலே, பெரியார் ராமசாமியும், குமாரராஜா, சாமியப்பா, பாண்டியன் ஆகியோர், பார்ப்பனரல்லாதாரின் பிரதிநிதிகளாக, திராவிடநாட்டுத் தலைவர்களாக, சர். கிரிப்சிடம், பேசிக்கொண்டிருக்கும்நோக்கில், வேலூர் வெத்து வேட்டு, வெந்ததைத்தின்றதற்கு வேலை வேண்டுமே என்பதற்காகப் பார்ப்பனரல்லாதாருக்கு நான்தான் பிரதிநிதி என்றுரைப்பதற்கும், அதிக வித்தியாச மில்லையல்லவா?

நரகல் நடையழகர், நடுங்கா நாக்கழகர், வேலூர் குப்புச்சாமியாரின் வாயிலிருந்து வெளிவந்த வாடைமிக்க வாசகங்கள் பல உண்டு. அவரது சகாக்களின் செவிகளுக்கும் நாராசம் போலிருக்கும் நடையில் பேசும் பெருங்குணவான் அவர். பொதுமேடைகளில் எதிர்க்கட்சியினரைத் தாறுமாறுகத்திட்டுவதற்காகவே பிறவி எடுத்ததாகக்கருதிக் கொண்டுள்ள இந்த நடமாடும் தப்பட்டையின் போக்கைப்பற்றி நான் பலர் கூறிக்கேட்டதுண்டு, ஆனல் ஆச்சரியப்பட்டதுமில்லை, ஆயாசமடைந்ததுமில்லை. நாடாள நாயை அமர்த்தினல், அது வருகிறவர் போகிறவரைக் கண்டு ‘வள்’ எனக் குலைத்து வெடுக்கெனக் கடிப்பதுதான் முறை என்று கருதும். கழுதைக்குக் கிரீடம்கட்டினல், அது காலால் உதைத்தும், கத்தியும், தனது ஆட்சியைச் செலுத்தும். படிப்பு, பயிற்சி, பண்பு, பழக்கம், ஆகிய எந்தவிதத்தாலும், நாகரிகம் பெருதவர்களை மேடைவாசிகளாக்கினல், அவர்கள் நரகல் நடையழகைத்தான் காட்டுவார்கள். அவர்களிடம் உள்ளது அதுதானே! தறுதலைத் தாண்டவராயனுக்குத் தர்பாரில் இடங்கிடைத்தால், முடிச்சவிழ்த்த முத்தன், குடித்துப்புரளும் கோவிந்தன், கன்னக்கோல் கந்தன், ஆகியோர் பிரதானிகளாகி விடுகிறர்கள்! இதிலேஆச்சரியமென்ன இருக்கமுடியும்! இயல்புக்கேற்றபடி இடம் இருக்க வேண்டும். தவறினல், வேறுபல தவறுகள் தானகவளரும்.

வேலூர்த்தோழர் விடுத்த தந்தியைக் கண்டதும், சர். கிரிப்ஸ், என்ன செய்தார்! “கூப்பிட்டுவாருங்கள் அந்தக் குப்புச்சாமியாரை! அவரேதான் பிரதிநிதி” என்று கூறினரா? இல்லை! அவர் தமது ஆளைக்கூப்பிட்டார். அவன் அந்தத்தந்தியைக் குப்பைக்கூடையில் போட்டு விட்டு வேறு வேலையைக் கவனித்தான். இத்தகைய முந்திரிக்கொட்டைகள் விடும் மூடங்களுக்கு வேறு என்ன கதி நேரிடமுடியும்!

பச்சைமுத்து, பவளம் பவுன் ஆகியவற்றைத் தூவியபஞ்சணையில் சாய்ந்துகிடக்கும் சிங்காரச் சீமான், நானே தமிழரின் தலைவனுக வேண்டும் என்று கூறினலும், நான் பாரிஸ்டர் படித்துத் தேறியவன், பல கலைவல்லவன், பட்டம் பல பெற்றவன், எனவே நானே தமிழரின் தலைவராக வேண்டும் என்று சொன்னலும், தியாகத்தீயில் குளித்தெழுந்து, கஷ்டநஷ்டமெனும் கடலைக் கடக்கத்துணிந்து, மலைபோல் வரும் எதிர்ப்பை மலர்ச்செண்டுபோல் கருதி வரவேற்று, உழைத்து, உறுதிகாட்டி, ஊராள்வோரின் உபசாரமோ, உல்லாசவாசிகளின் உரசலோ இடையே உறவு கொண்டாட முன்வந்தாலும், மயங்காது, மனங்குலையாது உள்ளவரே எமக்குவேண்டும் அவரே எமதுதலைவர், என்று கூறும் தமிழரிடையே, எதிலும் எழாமிடமும் பெருத ஒருவர், நான் உங்கள்பிரதிநிதி என்றுரைத்தால், தமிழர் அதைக்கேட்க மனம் ஒப்புவார்களா? வீதி வழியேபோகும் வசீகரக் கன்னிகையை நோக்கி, அந்த மங்கைக்கேற்ற மணளன் நானே என்று ஒரு மடமன்னர்சாமி கூறினல், பற்கள், பலகரைபோல் கீழே வீழாதா! பக்கத்திலே இருந்து கேட்பவர்கள், சும்மா இருப்பார்களா?

பார்ப்பனரல்லாதாருக்குப் பிரதிநிதிகளாக, பண்புள்ளவர்கள் வேண்டும்! பக்குவமுள்ளவர்கள் வேண்டும்! பதவியும் பட்டமும் பெற்றவர்களைக்கண்டதும், பத்தும்விட்ட பன்னடைகள்போல் பராக்குக்கூறும் பேர்வழிகள், எப்படிப்பார்ப்பனரல்லாதாருக்குப் பிரதிநிதியாக முடியும்! எதைக்கண்டு இந்தக்குப்புசாமியாரை சர். கிரிப்ஸ் கூப்பிடுவார். இது காங்கிரசிலே ஒரு கொடி தாங்கி! கோபுரத்துப் பொம்மை!! தமிழரின் கோடரி! இதனை ஏன் சர். கிரிப்ஸ்கூப்பிடப் போகிறர்!

தென்னட்டுக் காங்கிரசின் பிரதிநிதியாக, ஒரு ஆச்சாரியார் போகமுடிந்தது! பார்ப்பன சபை காங்கிரஸ், என்பதற்கு. பளிச்சென்ற உதாரணம் இது. தென்னட்டுக்காங்கிரசிலே, வேறு எந்த ‘தமிழர்’ பிரதிநிதியாக மதிக்கப்பட்டார்? தென்னட்டுக்கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சிக்கு, 4-பேர் பிரதிநிதிகள்! நால்வரும் தமிழர்! காங்கிரசிலோ, தென்னட்டுத் திருத்தூதராகச் சென்றவர் ஒரு பார்ப்பனர் மட்டுமே! ரோஷமிருந்ததாமற்றக் காங்கிரஸ் தமிழ்த்தலைவர்களுக்கு!! குமாரமங்கலம் ஜெமீன்தாரரைக் கூப்பிடுவார் இல்லை! ஒளி வீசும் வைரக்கடுக்கனை அணிந்துகொண்டு தஞ்சைத்தரணியில் காங்கிரசின் ஒளி வீசச் செய்வேன் என்றுகூறும் சீமான் நாடிமுத்து, சேலம் நாச்சியப்பர், கோவை ராமலிங்கர், கூடலூர் சீதாராம ரெட்டியார், மற்றும் முத்துரங்கம். வேங்கடசாமி முதலிய ஆழ்வாராதிகள், ஆகியயாருக்காகிலும் அழைப்பு விடப்பட்டதா! கூப்பிடுவாருண்டா இந்தக் கூட்டத்தை! ஜஸ்டிசுக்கு 4பேர் பிரதிநிதிகளாகப் போனர்களே, நமது தென்னட்டுக்காங்கிரசுக்காகவும் நாலுபேரைக் கூப்பிடட்டுமே என்றுகேட்கக்கூட ரோஷம் பிறக்கக்காணேம்.

“எங்கள் நாட்டிலே, காங்கிரசென்பது ஒரு பார்ப்பன சபை என்றுதான் நாங்கள் கருதியிருக்கிறேம்”

“காரணம்?”

12-ம் பக்கம் பார்க்க.

காட்சியும் கருத்தும்

# கங்கையின் மழலை!

(C. N. A.)

"எழும்பூரில் இரவு 9-40ககுப் புறப்படும் வண்டியில் புறப்படவும், அந்த வண்டி கும்பகோணத்துக்குக் காலையில் 7-மணிக்கு வருகிறது. நான்இரயிலுக்குவந்திருக்கிறேன். இரயில் தவறிவிடப் போகிறது. 940க்கு வண்டி புறப்படுகிறது. 9-க்குள் ஸ்டேஷனுக்குப்புறப்பட்டு விடுங்கள்." அன்பர், குடந்தை, K. K. நீலமேகம் இதுபோன்று பல கடிதங்கள் எழுதியிருப்பார் எனக்கு. கடிதத்தைப் படிக்கும்போது முதலிலே எனக்குச் சிரிப்பும், பிறகு திகிலும்வரும். இவ்வளவு விளக்கமாக எழும்பூரில் வண்டிபுறப்படும் நேரத்தைக் கும்பகோணத்திலிருந்து எழுதுகிறரே என்று சிரித்துக் கொள்வேன், ஆமாம் இவ்வளவு விளக்கமாக அவர் எழுதியும், வண்டி தவறிவிட்டால் என்னசெய்வது என்று திகில்கொள்ளுவேன். பலமுறை இரயில் தவறியதுண்டு, வழியும் தவறியதுண்டு. எனதுவாழ்க்கை வண்டி எப்படி வளைந்த தண்டவாளங்களின் மீது ஓடுகிறதோ அதுபோலவே பெரும்பாலும் எனது ஊர்ப் பிரயாணங்களும்! இத்தகைய எனக்கு "உடனே புறப்பட்டு அரித்துவாரத்தில் வந்து என்னைச் சந்திக்கச் சொல்லுங்கள்" என்று, **பேரியார்**, சண்டே அப்சர்வர் ஆசிரியரிடம். தகவல் அனுப்பினர், டில்லியிலிருந்து கொண்டு. பம்பாயில் தோழர் S. முத்தய்யா முதலியார் அவர்களின் தலைமையிற் கூடிய நேஷனல் டிமோகிராடிக் மாநாட்டுக்குச் சென்றிருந்த பெரியாரை, தோழர். M. N. ராய், வடநாடு சுற்றுப்பயணம் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அதற்குநான் உடனிருக்க வேண்டுமென்று விரும்பிப், பெரியார், அனுப்பிய அன்பழைப்பு எனக்கு அச்சத்தை உண்டாக்கிவிட்டது. "நாம் எங்கே, அரித்துவாரம் எங்கே! இரயிலில்இடம் கிடைப்பதேது? கிடைத்தாலும் டில்லிபோய், அங்கிருந்து வேறுவண்டிபிடித்து அரித்துவாரம் வரவேண்டுமே, அந்தக்கஷ்டம் வேறு" என்று எண்ணினேன், மணவறைக்குப்புதுபெண்ணைத்தைரியங்கூறிஅழைத்து வருகிறர்களே, வைதீகக் கலியாணங்களிலே, அதுபோல் நண்பர்கள் தைரியமளித்தனர்! சிலர் புத்தகம்! சிலர் பழம்! சிலர் வெற்றிலைபாக்கு! பலர் தமதுபுன்சிரிப்பு ஆகியவைகளை அளித்தனர். வண்டி நகருமுன்பு சென்னை சென்ட்ரலில் தோழர். S. குருசாமி, மூன்று சாத்துக்குடிகள் தந்தார்! அவற்றை வண்டியில் சாமான்வைக்கும் இடத்திலேவைக்க எழுந்தேன், ஏற்கனவே காலை ஓரளவு நீட்டிப் படுத்துக்கொண்டிருந்த 'இஸ்லாமிய சிப்பாய்', காலைப் பூராவும் நீட்டிவிட்டார், வண்டி நகர்ந்தது, நண்பர்கள் மலர்ந்த முகத்துடன் செலவுதந்தனர், சிப்பாயின் காலுக்கும், மறுபக்கத்துப் பிரயாணி வைத்திருந்த பெட்டிக்கும் இடையே கிடைத்த சிறு இடத்தில், உட்கார்ந்தேன். இது இண்டர்கிளாஸ் வண்டியின் இலட்சணம்! வண்டிசெல்லச்செல்ல சிப்பாயின் நீட்டிய கால்கள் மடங்க ஆரம்பித்தன. சில ஸ்டேஷனுக்குப் பிறகு இருவருமாகச் 'சாயா' சாப்பிட்டோம். அவர் தமது மலாய் நாட்டு அனுபவங்களை உடைந்த ஆங்கிலத்தில் கூறினர், இருவரும் நண்பர்களானோம். டில்லிபோய்ச் சேர்ந்தேன். இடையே என்னென்ன கண்டீர்கள், ஒரே அடியாக டில்லிபோய்ச் சேர்ந்தேன் என்று கூறிவிட்டீரே என்று தோழர்கள் கேட்பர். புறப்பட்டோம், போய்ச் சேர்ந்தோம், என்றிருக்கக்கூடாதா, எவ்வளவுநேரம் இரயிலில்இருப்பது மணிக்கணக்குப் போய், நாட்கணக்கிலே வந்துவிடுகிறதே, என்று சலிப்புத்தோன்றும்படி, இரயில் மூன்று நாட்கள் ஓடி, மனித மூட்டைகளை (ஆம்! அந்த ஸ்திதிக்குப் பெரும்பாலான பிரயாணிகள் வந்துவிடுகின்றனர்) டில்லியில் தள்ளுகிறது இரயில்வண்டி. ஆகையால், எழுதும்போதாவது சென்னையில் புறப்பட்டேன் டில்லிபோய்ச் சேர்ந்தேன் என்று இருக்கட்டும் என்று எண்ணியோ இடையே நடந்த சம்பவங்கள், நினைவுகள் ஆகியவைகள் பற்றி எழுதவில்லை. உங்களுக்குத் தெரியாதா, நீண்ட பயணத்திலே நேரிடக் கூடிய நவரசங்கள்!

டில்லியில் ஓட்டலில் தங்கினேன்-சென்னைப்பார்ப்பனருடையது-டில்லி செகரடேரியட்டில் வேலையில் உள்ள பலசென்னைவாசிகள், (~~வழக்கப்படி அக்கிரகார சொரூபங்களே அதிகம்~~,) அந்த ஓட்டலில் வருவதும் போவதுமாக இருந்தனர்-சிலர் அங்கேயே தங்கியுமிருந்தனர். காலையில் போனேன் டில்லிக்கு, இரவு புறப்பட்டேன் அரித்துவாரத்துக்கு. மறுதினம் காலையில் அரித்துவாரம் சேர்ந்தேன். இடையே தூங்கவில்லை, தூங்கியிருந்தால், அரித்துவாரம் என்னை வந்தெழுப்பி, 'இறங்கு' என்று கூப்பிட்டா இருக்கும்!

இந்த வாழ்க்கையை மாயமென்று எண்ணி, பிறவியைச் சுமைஎனக் கருதிக்கொண்டு, எப்படியாவது விரைவிலே இறைவன் திருவடி நிழலில் இரண்டறக் கலக்கவேண்டும் என்று எண்ணிக்கொள்ளும் இயல்புடையவர்கள், மோட்ச சாம்ராச்யத்தில் சீட் ரிசர்வ் செய்யவும், பாவங்களைக்கழுவவும், புண்ணியத்தைத்தேடவும், புராணிகர்கள் கூறியுள்ளபடி பல க்ஷேத்திரங்களுக்குச் செல்கிறர்களல்லவா! பரிதாபம், அவர்கள் ஏனோ வாழ்க்கையைக்கண்டு இப்படிப் பயப்படுகிறர்கள்! மானிடப்பிறவிகள், மகத்தானஎவ்வளவோ பணிகளை மக்களுக்காற்றி, உலகைப் புன்னகைப் பூந்தோட்டமாக்க எத்தனையோ விதத்திலே உழைக்க வேண்டியதிருக்க, "காயமே, இதுபொய்யடா வெறும் காற்றடைந்த பையடா" என்று கருதிக்கொண்டு கதறுகிறர்கள். செடிகொடி, மிருகங்கள் முதலியன மானிடருக்குப் பயன்தரும் அளவுக்கு, மானிடர் மானிடருக்குப் பயன்பட்டால், அவர்கள் தேடித்தேடி, "கால்களும் நோகுதே கடும்பசிஆகுதே" என்றுபாடி, எந்த மகேஸ்வரனைக்காண, யாத்திரை, பூசை, ஆராதனை அபிஷேகம், பாராயணம் பஜனை போன்றவைகளைச் செய்கின்றனரோ, அந்தமகேஸ்வரன், நான் பூலோகத்திலேதான் இனிவசிப்பேன், என்றுகூறிவிடத்தக்க அற்புதமானநிலை, உலகில் ஏற்படும். ஆனால், புல்பூண்டு பயன்படும் அந்த அளவுக்குக்கூட, மனிதர், மற்ற மனிதருக்குப் பயன்படத்தக்கமுறை உலகில் இல்லை. அதுமட்டுமா? மனிதரை மனிதர், நிந்திப்பது, கெடுப்பது, எதிர்ப்பது, அழிப்பது, இவை நடக்கிறது. இத்தகைய கேடுகளைக் களைய, தீர்த்தமாடி, திருப்பல்லாண்டு பாடி திவ்ய க்ஷேத்திர யாத்திரைகள் செய்வதல்ல வழி. வாழ்க்கை மாயம் என்றுரைக்கும் வரட்டுப்பேச்சு ஒழிக்கப்பட்டு, வாழ்க்கை பலருக்குப் பாலைவனமாகவும், சிலருக்குமட்டுமே சிங்காரத் தோட்டமாகவும் இருக்கிறதே அந்தக்கொடுமையைப் போக்க வேண்டும், அது செய்யக் கங்கையில் மூழ்கி, காசியில் தொழுது மாசிலாமணியைக் காண்பதற்குக் கடுந்தவம் செய்வது, வழியல்ல. பக்தி, அருளைத்தரும், செய்வோருக்கு, என்பர் மதபோதகர்கள். ஆனால் ஒருபக்தர் அருள்பெற்றால், அதனால், அனைத்துயிர்க்கும் அருள் கிட்டுமென்றுரைக்கவோ, அவனியில் உள்ள சீர்கேடுகள் அழிந்துபட்டு, சாந்தமும் சுபீட்சமும் பெருகி விடும். என்றோ கூறமுடியாது. அங்ஙனமே நடக்குமென்பதுண்மையாயின்,

சம்சயவாதிகள் தோன்றுமுன்னம் தோன்றி தோடுடைய செவியனைப் பாடிய பக்திமான்கள், சம்சயவாதிகளைச் சம்ஹாரித்தோம் என்று சங்கநாதம் செய்த சங்கரர் முதலாய குருமார்கள், பலர் தோன்றித் தோன்றி மறைந்தபிறகும், உலகிலே, கொடுமையும் கோரமும், இருக்கக்காரணமில்லை. மருந்து பலமுறை பருகியும் நோய் தீரவில்லை என்றால், மருத்துவர் நல்லவர், மருந்து அபூர்வமானது என்று கூறிக்கொண்டிருத்தலால் பயன்யாது! ஆமாம்! இதுவல்ல நான் எழுதவந்த விஷயம், இடையே வந்தது, இத்துடன் இருக்கட்டும்.

அரித்துவாரம், திவ்ய க்ஷேத்திரங்களுள் ஒன்று! அதைக்காண, கங்கையில் மூழ்கிக் கதிநல்லதாருக என வேண்ட, பலபல ஆயிரமக்கள், ஆண்டுதோறும்வரும் இடம், அரித்துவாரம். ஊரிலே முக்கால்பாகம், சத்திரம், மக்களிலே பாதிப்பேர் பண்டாக்கள்; நமது தமிழகத்தார் கட்டியுள்ள சத்திரங்களும் ஆங்குள்ளன. பிறநாட்டவரின் பெரும்பெரும், கோட்டைச்சுவர்கள் போன்ற மதில்கள் கொண்ட பழய சத்திரங்களும் பலஉள. காவிஉடை, கமண்டலமேந்திய கரங்கள், சடைமுடி தாரிகள், பட்டைநாமங்கள், உடல்நெடுக நீறுபூசியோர், உடல் முழுதும் ஊண் பொதியர்களாக உல்லாச உபதேசிகள், ஆகியோரை, அரித்துவாரத்தில் சதா காணலாம். அவர்கள் எவ்வளவு கெம்பீரமாகக் கவலையற்று, உலவுகிறார்களோ, அதைவிடக் கெம்பீரமாகவும், கவலையற்றும், கோயில்மாடுகள் வீதிகளில் உலவும். குரங்குக்கூட்டமோ அதிகம். கொசுத்தொல்லையும் அப்படியே. 'கும்பமேளாவுக்கு வரவேண்டும், இங்கே கூடும் ஜனங்களைக்காணவேண்டும்'' என்று பெருமையுடன் கூறுவார்கள், அரித்துவாரவாசிகள். அத்தகைய அரித்துவாரத்தில், பெரியாரைத் தேடிக்கொண்டு நான் சென்றேன். அவர் எங்கே தங்கி இருப்பதாக எனக்குத் தகவல் தரப்பட்டதோ, அந்தவிலாசம், விளக்கமற்றிருந்ததால், நான் வீதி பலசுற்றினேன், பலசாதிமக்களைக்கண்டேன், ஒவ்வொருவரும் இப்போதோ, அடுத்த விநாடியோ, இந்த உலகை விட்டு நீங்கி விடவேண்டும் என்று திடமான எண்ணம்கொண்டவர்கள் போலவே, அவசர அவசரமாகக் கங்கைக்குப்போவதும், முழுகியானதும் ஆடை உலருமுன்னம் பண்டாக்களின் பாதத்தைக் கும்பிடுவதுமாக இருந்தனர்.

மராட்டியத் தோழரொருவர், இடையே என்னைக் கண்டார், ஆங்கிலத்தில் அவரிடம் பேசி ஒரு ஏற்பாட்டுக்கு வந்தேன். முதலிலே, மராட்டியரின் சத்திரத்துக்குப் போவது, சாமான்களை அங்கே வைத்துவிடுவது, "சா" சாப்பிடுவது, பிறகு 'டாங்கா' பிடித்துக்கொண்டு ஊரைச்சுற்றுவது, விலாசதாரரைக் கண்டு பிடிப்பது. இது அவர் ஏற்பாடு. செலவு முதலிலே அவர் பேச்சின்படி ஒன்றும் கிடையாது, தர்மசத்திரம், கைங்கரியம், என்றார். முடிவிலே ஒரு முழு ரூபாய்! ஆனால், அவர்தந்த "சா"வை நான்இப்போது ஒன்பது முழு ரூபாய்கள் கொடுத்தாலும் பெறமுடியாது. புனாவிலிருந்து அங்குவந்திருந்த ஒரு குடும்பத்தாரிடம், சென்னையிலிருந்து ஒரு பக்தர் வந்திருக்கிறார், பசி ஆகவே 'சா' கொடுத்தால் புண்ணியம் என்று கூறி 'சா'வாங்கிக்கொடுத்தார் என்னிடம். மிகப் பழைய அந்த சத்திரத்தின் மேன்மாடியில், ஒரு அறைக்குள் நின்றுகொண்டு, ஜன்னல் வழியாக வெளியே பார்த்தேன். சத்திரத்தின் சுவற்றை முத்தமிட்டுக்கொண்டு கங்கை செல்கிறது. அதைக்காப்பது தனது கடன் என்று கருதிக்கொண்டிருப் பது போல், மறு கரையில், மா, பலா முதலிய மரங்களடர்ந்த சாலை, அந்தச் சாலைக்கு அரண்போல், சிறு குன்றுகள், அவைகளைத் தமது செல்லப்பிள்ளைகள் என்று கூறிக்கொண்டு நிற்பதுபோல், பெரிய மலைகள், அந்த மலைகளை மேடையாகக்கொண்டு நர்த்தனம் புரிவதுபோல், மேகங்கள், இதற்குக்கீதம் போல், கங்கை பாய்வதன் ஒலி, இச்காட்சியைக் காணவந்த பெண்கள் போல், மரக்கிளைகளில் பச்சை நிறக்கிளிகள், பஞ்சவர்ணக்கிளிகள், நாடகமேடையிலே காலரியில் அமர்ந்து தாளமிட்டும் ஆர்ப்பரித்தும் அட்டகாசம் செய்யும் உற்சாகத் தோழர்கள் போல், குளிக்கவருபவர்கள் மந்திரமோதியும், துணி துவைத்தும் செய்யும் சத்தம், கட்டணம் தராததால், கொட்டகைக்கு வெளியே இருந்துகொண்டு, கற்களை வீசும் குறும்பர்கள் போல், குரங்கினங்கள், குதித்தும் தாவியும், கீச்சிட்டும், கிளைகளை முறித்தெறிந்துகொண்டும் சேட்டைகள் செய்தன! கையில் இருந்த "சா" ஆறிவிட்டது, குளிர்ந்த காற்றுவீசினதால், ஆனால், "சா" வின் வெப்பம் ஆறிவிட்டதைவிட விரைவிலே, பிரயாண அலுப்பினால், உடலிலும் உள்ளத்திலும் எனக்கிருந்த வெப்பம் தணிந்து விட்டது. ஆகா! மேனாடுகளில் இத்தகைய ஓர் இயற்கை எழில் நிரம்பிய இடம் இருப்பின், அது மன்னரும் மனோகரிகளும், மக்களும் குடும்பமும், நோயுற்றோரும் நொந்தோரும், சென்றுதங்கி, உடலும்உள்ளமும் ஆரோக்கியம்பெறத் தக்க, சுகவாசஸ்தலமாக்கி, சுவைப்பர். இங்கு அந்த அரித்துவாரம் மதவாதிகளிடம் சிக்கிக்கொண்டு படாத பாடு படுகிறது. அதைக் காப்பாற்ற யார் முன் வருவார்கள்!

**கங்கை**, இமயத்துப் பனியுருகி, மல்லிகைப்பூ மாலைபோல் துவங்கி, பாறைகளைப் பளிங்காக்கி, மலையையும் இளகச்செய்யும் மழலை மொழி ஓசையுடன் உலவி, வளர்ந்து வளைந்து, குழைந்து குலவி, நிலத்தை அணுகி, செல்வவான் வீட்டுச்சிங்காரி பணியும் பட்டாடையும் பூண்டு, பாதச் சிலம்பு கொஞ்ச நடந்து வருவதுபோல், அரித்துவாரத்தில் வருகிறது. பிறகு கங்கை, மங்கைப்பருவம் பெற்று, தங்கு தடை நீங்கப் பெற்று, தாய்ப் பருவமுற்றுச் செல்கிறது வேறு பிரதேசங்களில். அரித்துவாரத்தில் கங்கையின் இங்கித மழலையின் இசையின்பம் நுகரலாம், இயற்கை எழிலைக்கண்டு இன்புறுவோர்!

## குமஸ்தாவின் பெண்.

9ம் பக்கத் தொடர்ச்சி.

தோஷத்தைப்பற்றிக் கொஞ்சிக்கொண்டிருக்கும் கிளியே! கூவும் குயிலே! ஆடும்மயிலே! தாமரைபூத்த குளத்திலே தாண்டவநடை நடக்கும் அன்னமே! யார் போய் கூறமுன்வருவீர்கள்'' இதுதான், நான் கோடிட்ட பாகம்.

சாந்தா, குறும்புத்தனமாக ஒருவேலை செய்து விட்டாள் என்பது எனக்குப்பிறகே தெரியவந்தது. **கண்ணபிரான்** என்பதை அடித்து விட்டு, சோமு, என்று, அவள் எழுதிவிட்டு, பிறகு, புத்தகத்தை சோமுவிடம் கொடுத்தாளாம். கொடுக்கும்போது, "இந்தப் புத்தகம் ரொம்பநன்றாக இருந்ததாம். அக்கா படித்துவிட்டு, முக்கியமான இடத்திலே கோடு போட்டு இருக்கிறாள்'' என்றும் சொன்னாளாம். சோமுபுன்னகையுடன், "காந்தா நல்ல புத்திசாலியல்லவா! பரமசாது! பகவத் கடாட்சம் அவளுக்குக் கிடைக்கும். புண்ணியகதைகளைப் படிப்பதிலே அவளுக்கு விருப்பம் இருப்பதால், அவள் நல்ல குணவதியாக விளங்குவாள்'' என்று கூறினாராம்.

"புத்தகத்தைப் புரட்டிப்பார்த்தாராடி'' என்று நான் ஆவலுடன் கேட்டேன். புத்தகத்தைப்பார்த்து விட்டு, விஷயம் தெரிந்துகொண்டு, சோமு, தனது சம்மதத்தைக் கூறியனுப்பினர் என்று பேதை நான் எண்ணிக்கொண்டேன்.

"புத்தகத்தைப்பிரித்துப் பார்க்கவில்லையே, அக்கா'' என்று சாந்தா சோகத்துடன் கூறிவிட்டு, "நான் வந்துவிட்ட பிறகு நிச்சயம் பார்த்திருப்பார்'' என்று என்னைத் தேற்றினாள். சாந்தா தேற்றிவிடக்கூடிய நோயா எனக்கு! என்மருந்து, எதிர்வீட்டில்! என் நோய், அவருக்குத் தெரிந்தால்தானே!! (தொடரும்)

# ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதங்கள்!

வீனஸ்.

தாமரைபூத்த குளம், அதன்மருங்கே பழமுதிர் சோலை, மற்றோர்புறம் வாசமலர்த் தோட்டம், அதையொட்டி சிற்றாறு, இவைகளைப் புறத்தே கொண்ட மனோகர மாளிகை, அதற்கோர் அலங்கார உப்பரிகை, உப்பரிகைமீது உயிருள்ளனவோ வெனச் சந்தேகிக்கத்தக்கதான உன்னத சிலைகள், சிலைகளின் உடலிலே, தகதகவெனத்தங்கம்போல் பிரகாசிக்கும் ஆடைகள், அந்த ஆடைகளைக்கண்டு மயங்கி, மேலே தத்தி விளையாடும் பஞ்சவர்ணக்கிளிகள், "கிளிகளைப் பிடிப்போம் வாரீர்" என்று பாங்கியரைக் குயிற்குரலாற்கூவி அழைத்து அன்னமென நடந்து சென்று கிளி பிடிபடாததால், "பறந்தனவே பஞ்சவர்ணக்கிளிகள்" என்று, பாங்கியிடம்கூறத், திரும்பி நோக்கும், நீலவிழியாள் முன்பு, நீண்ட புகழும், நெற்றியில் இருவிண் மீன்களும், கொண்ட அடவன், "அவைபோனாலென்ன, என்னைப்பிடி" என்று கொஞ்ச, "பிடிக்க இயலாதோ?" என்று குறும்புத்தனத்துடன்கூறி அவனைத்தாவிப் பிடிக்க முயன்று, முடியாதுபோய், துவளும் கொடிபோல் சாய, அவளை உடனே, மார்பில் சாய்த்துக்கொண்டு, "வலி இங்கோ, அங்கோ?" என்று உசாவுபவன்போல் பாசாங்கு செய்து, மார்புறத்தழுவி, கன்னத்தை முத்த……………

ரோம் சாம்ராச்யத்து விரர்கள், போரிடும்நேரம் அதிகாரப்போட்டியில் ஈடுபடும் நேரம்போக, மற்றைய நேரத்தில், இந்த நாடகமே ஆடினர். இவ்வளவுக்கும், இதற்கு மேற்பட்ட நவரச நாடகங்களுக்கும் இலாயக்கான சல்லாபிகள், சாம்ராச்யத்தில் இருந்தனர். அவர்களிற் சிலர், தமது கணவன், வாழ்க்கையில்போக போக்கியங்களை அனுபவிக்க வசதிகள் செய்துகொடுத்துவிட்டால் போதுமென்றிருந்தனர். சிலர் முற்றும் தமக்கே உரித்தானவராகத்தமது மணாளர் இருத்தல் வேண்டும் என்றிருந்தனர். வேறுசிலர், ஆடவர், வண்டுகள், பெண்ணினம், மலர், தேன் கண்ட இடத்தில் வண்டு உலவும்என்று மதனசாஸ்திரம்பேசி, மனதைத் தேற்றிக்கொள்வர். ஒருசிலர், அலங்காரம், போகம், இவை இருந்தால் மட்டும் போதுமா, ஆண்களுக்குள்ள அதிகாரம் நமக்கும் வேண்டாமா என்று எண்ணும் துணிபுள்ளவர். அவர்கள், தமது கணவன் மார்கள் பெறும் அதிகாரம், அந்தஸ்து, புகழ், பரிசு, ஆகியவற்றில் தமக்குச்சரியான பங்கிருக்க வேண்டுமென்று விரும்பி, அதற்கான சாகசம் செய்வர். மற்றுஞ் சிலருண்டு, மக்களுக்குமன்னன், ஆனால் எனக்கு அவர் மணாளன், மக்களுக்கு அவர்சொல் சட்டம், அவருக்கோ என்சொல் சட்டம்" என்று மகிழ்வோடு கூறிப், புருடனைத் தமது பதுமைபோல் ஆட்டிவைக்க வேண்டும் என்ற ஆசைகொண்டவர்கள். அது நிறைவேற ஆயிரந்தந்திரங்களைக் கற்றுத் தேறினவர்கள். அத்தகைய அல்லிக்கூட்டத்தவள், அகஸ்டசின் மனைவி அழகி **லிவியா.**

சீமான் வீட்டுச் சிங்கார மாளிகையைத் துறந்து மன்னனின் அரண்மனை புகுந்ததும், லிவியா, "அகஸ்டஸ் ரோம் சாம்ராச்யத்தை ஆளட்டும், நான் அகஸ்டசை ஆள்வேன்" என்று மனதில் தீர்மானித்துக் கொண்டாள். யாருக்குமஞ்சா அகஸ்டஸ், அவள் அழகுக்கு அஞ்சினான். போர்க்களங்களிலே கலங்காத அகஸ்டஸ், அந்தப்புரத்திலே நுழைந்ததும் அடங்கிவிடுவான்! எந்த நாட்டுக்காவலருக்கும் வணங்காத அவனது சிரம், லிவியாவின் முன்பு பன்முறை வணங்கிற்று! அவளிடம், அகஸ்டஸ், அவ்வளவு சொக்கிக்கிடந்தான்.

ரோம்நாட்டு இரணகளச்சூரர்களிற்பலர் இங்ஙனம் பஞ்சணைப் பதுமைகளிடம் தமது பிரதாபம், பரிபாலனம், புகழ் சக்தி, எதிர்கால வாழ்வு முதலியவற்றை அடகு வைத்துவிட்டு, மீட்டுக்கொள்ள முடியாமலும் திண்டாடினார்கள். ஜெகமஞ்சப்போரிட்ட ஜூலியஸ், கிளியோ பாட்ராவினிடம் குழந்தைபோல் விளையாடிக் கிடந்தான், அந்தோனியும் அதே கதி, அகஸ்டசோவெனில், லிவியாவிடம் கட்டுண்டுக்கிடந்தான்.

ரோம் சாம்ராச்யத்தில், லிவியாவின் ஆணை புகாத இடமோ, நேரமோகிடையாது. ஆம்! அகஸ்டசின் நெஞ்சிலே புகுந்து கொண்டவளால், வேறு எங்கு புகுந்து ஆட்சி செலுத்த முடியாது! மக்கள், தன்னைப் போற்றிப் புகழ்ந்து, வாழ்த்தி வணங்கும் படி, அடக்கமும் அன்பும் கொண்டவளென்று யாவரும் நம்பும் படி நடித்தாள் லிவியா.

லிவியாவை, அவளது முதல் புருடனிடமிருந்து விலகச்செய்து, தனக்குரிமையாக்கிக் கொண்ட அகஸ்டஸ், ரோம் சாம்ராச்ய அதிகாரத்துறையிலும், தன்னுடன் 'பங்கு' பெற்று அதிகாரம் செலுத்தி வந்த, **பாம்பே** எனும் படைத்தலைவனையும், தங்கை புருடனும், கிளியோ பாட்ராவின் காதலனுமான அந்தோனியையும் போரில் வென்று, புறத்தே ஒதுக்கித் தள்ளி விட்டு, ரோம் சாம்ராச்யத்துக்கு ஈடு எதிர்ப்பில்லாத தனி ஆட்சி யாளனானான். தனது பட்டமகிஷியான லிவியாவுக்கு, நாட்டாரனைவரும் நன்மதிப்புத் தரவேண்டுமென்பதிலே, அகஸ்டஸ், மிக்க அக்கறையுடன் பாடுபட்டான். தனக்கு எத்தகைய விருதுகள் அளிக்கப்படுகிறதோ அவைகள் லிவியாவுக்கும் தரப்படவேண்டுமென்று கட்டளையிட்டான். அவள் மனமகிழ எதுவும் செய்யச்சித்தமாயினான். அவளும், அதற்கேற்பவே நடந்துகொண்டாள். அகஸ்டசுக்குத் தன்மீதுள்ள அன்பு அணுவளவும் குறையாதபடி, பார்த்துக்கொண்டாள். அவன் குணமறிந்து, குறிப்பறிந்து நடந்துகொள்வதிலே மகாகெட்டிக்காரி லிவியா. அகஸ்டஸ், சிற்சில சமயங்களில், தர்பாரில் நடமாடும் தளுக்குச் சுந்தரிகளைத்தேடி அலைவான். லிவியா, கோபித்துக் கொள்வதில்லை. பொறாமைப் படுவதில்லை. ஏனெனில் தேர்திரும்பி நிலைவருதல்போல், அகஸ்டஸ், எப்படியும் தன்னிடமேவந்து சேருவான் என்ற தைரியம் அவளுக்குண்டு. வந்து சேரச்செய்யும் வழியும் கற்றவள். ஆகவே, அகஸ்டஸ்மீது கோபிப்பதில்லை. கண்டுங்காணாதவள் போல் இருந்துவிடுவாள். சில சந்தர்ப்பங்களில், "சரி! நடத்துங்கள், உங்கள் இஷ்டம் போல்" என்று தமாஷ் செய்வாள். அகஸ்டசுக்கு உல்லாசம் தேவை, அதை அவன் எவ்விதத்தால் பெற்றுக்கொள்வதானாலும், அதற்குக் குறுக்கே நிற்கக் கூடாது என்பது லிவியாவின் கருத்து இந்தத்தந்திரம், மிகுந்தபலனளித்தது. எத்தனை திடீர்க்காதலிகள் ஏற்பட்டாலும் அகஸ்டஸ், லிவியாவையே "சுந்தரநாரி! பிரதம பியாரி" என்று கருதினான். அவளிஷ்டப்பட்டதையெல்லாம் செய்தான்.

லிவியாவுக்குத்திருஷ்டி பூராவும், அகஸ்டஸ் காலத்துக்குப்பிறகும், அரசு, தன்வம்சத்துக்கு இருக்கும் படியான ஏற்பாட்டைச் செய்து முடிக்க வேண்டும் என்பதேயாகும். இருந்தமட்டும் அதிகாரம் செலுத்தினோம், தலையில் நரையும் முகத்தில் திரையும் உண்டானதும், வாழ்க்கையில் குறையும் புகழில் புரையும் உண்டாயின், என்செய்வது என்று ஏங்கிக்கொண்டு, அன்றொருநாள் இருந்ததை எண்ணி அழும் பேர்வழி

(9ம் பக்கம் பார்க்க)

"கஞ்சி நிதி லிமிடெட்"
காஞ்சீபுரம்.
28-வது ஸீரீஸ் ரூ. 1000, 500, 250, 100 & 50/-
ஏலச்சீட்டுகள்
15-4-42ல் ஆரம்பிக்கப்படும். சந்தாதார்களாக சேர விரும்புவோர்கள் உடனே விபரங்களுக்கு எழுதவும்.
K. R. சாரி, B. A.
செகிரிட்டரி.
N. B. எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

திராவிடநாடு

ஞாயிறு] 5—4—42 [காஞ்சி.

## கனவில்கண்ட கன்னிகை!

"சிற்பிகள் தமது சிந்தனையைச் சித்திரமாக்கியது போல் சமைத்த ஓர் சிங்கார நிலையம். நிலா காய்கிறது! வாரிவீசுகிறது ஒளியை! முல்லைச் சிரிப்புடன், முற்றத்திலே ஓர் மங்கை நின்றுகொண்டிருக்கிறாள். அவளது ரூபலாவண்யமோ, வர்ணனையைக் கடந்தது. என்னைத்தனது கண்களால் அழைத்தாள். மதனனே! வா! என்று பாடினாளா? இல்லை! ஏன் பாடவேண்டும்! அவளது பார்வை, பல்லாயிரம் பாடல்களின் கருத்தைத் தெரிவித்தன. தென்றல் எனைத்தழுவிற்று. தேன் குடத்தை நாடிநான் நடந்தேன். பூங்கொடியின் புன்னகை எனை இழுத்துச்சென்றது. கிட்டேசென்றேன்! தொட்டேன் கரத்தை! மட்டற்ற மகிழ்ச்சியுடன், அவளது கண்ணாடிக் கன்னத்தில், முத்தமிடத்துடித்தேன். நெஞ்சு நெகிழ்ந்தது! ஆனால்........."

"பிறகு என்ன நடந்தது?"

"திடீரென்று நான் விழித்துக் கொண்டேன்"

"விழித்துக்கொண்டாயா! அப்படியானால் நீ இதுவரை கூறிவந்தது, கனவில் நடந்த விஷயமா?"

"ஏன் கேட்கிறாய் அந்த வெட்கக்கேட்டை. கனவில் கண்டேன் அந்தக் கண்கவரும் கன்னிகையை. விழித்தேன் திடீரென்று. மாளிகை ஏது! மங்கை ஏது! அவளது சதங்கை ஒலி ஏது! எல்லாம் போயின. ஏக்கமே நின்றது."

"அட துர்ப்பாக்கியமே; விழித்ததும் சர்வமும் சூன்யமாயிற்று போலும்"

"அதுபோன்றிருந்தாலும் கவலை அதிகமிராதே. கனவில் நான் கண்டதோ ஓர் கட்டழகியை. ஆனால் விழித்துக்கொண்டு பார்க்கிறேன், யாரைக் கண்டேன், என்று எண்ணுகிறாய்? விளக்குமாறும் கையுமாகவே வேலைக்காரி வீராயி நிற்கக்கண்டேன். வீடு கூட்டவேண்டும், வெளியே போய்ப்படுங்கள்" என்று உத்திரவிட்டது, அந்த உருவம். கனவில் கண்டதற்கும் கண்ணெதிரே நிற்பதற்குமுள்ள வித்தியாசத்தைக் கண்டு கலங்கினேன்! என்று கனவில் தான் கண்ட கன்னிகையைப் பற்றி ஒரு வாலிபன் தனது நண்பனிடம் கூறும் கதைபோலாயிற்று, காங்கிரசாரின் நிலைமையும்.

கனவில் ஓர் கடைக் கண்ணழகியைக் கண்டது போல், இந்தியாவுக்குவந்த சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் மீது புகழ்பாடி, பூரித்து, கேட்டதைத்தருவார் என்று நம்பி மகிழ்ந்தனர், ஆனால், விழித்துக்கொண்டவன் விம்மியதுபோல், இன்று சர். கிரிப்ஸ் தந்த திட்டத்தைக் கண்டு, கண்பிசைந்து நிற்கின்றனர். சர். கிரிப்சை நம்பியது, கனவில் கண்ட காட்சிபோலாயிற்று அவர்களுக்கு.

கிரிப்ஸ் எமது நண்பர். காந்தியாரின் சீடர். ஜவஹரின் தோழர். அவரும் ஒரு மகாத்மா! அவர் இனி நாட்டுக்கு நாம் கோருவதைத் தருவார், என்று காங்கிரசார் வாயாறப்புகழ்ந்தனர், வந்துவிட்டது யோகம் என்றனர். கிரிப்சின் உடை, அவரது நடை அவரது பேச்சு, மூச்சு, புன்சிரிப்பு, புதுப்பார்வை, முதலியன பற்றி வர்ணித்தனர். அவர், கதர் சட்டை அணிந்திருந்தார், காந்தியாருக்குக் கதவண்டை வந்திருந்து கைலாகு கொடுத்தார், ஜவஹருடன் விருந்துண்டார், பிர்லா மாளிகைக்கு வந்து போனார். அவர் காங்கிரசுக்குத்தான் கடாட்சிப்பார், என்றுரைத்தனர், பூரித்தனர்.

இந்த எண்ணம் வீண்கனவாயிற்று. முன்பு, காந்தியாஸ்ரமத்தில் வந்து தங்கிய கிரிப்ஸ், இம்முறை வைசிராய் மாளிகைக்குச் சென்றார். முன்பு காங்கிரஸ் காரருடன் மட்டுமே பழகியவர், இம்முறை எல்லாக் கட்சித்தலைவர்களையும் கண்டுபேசினார். அந்தக்கிரிப்ஸ் வேறு, இந்தக் கிரிப்ஸ் வேறு என்பதைக் காங்கிரசார் உணரும்படியாயிற்று.

முஸ்லீம் லீகோ, நந்தம் கட்சித்தலைவர்களோ, சர். கிரிப்ஸ்வந்தபோது, "எந்தன் இடது தோளும், கண்ணும் துடிப்பதென்ன?" என்று பாடி ஆடவில்லை. வருகிறவரிடம் நமது குறையையும் கோரிக்கையையும், முடிபுகளையும் முதுமொழிகளையும் எடுத்துரைத்து நீதிவழங்குமாறு கேட்போம். தந்தால் பெறுவோம். இல்லையேல், போரிடுவோம், என்று மட்டுமே தீர்மானித்தனர். எனவே, சர். கிரிப்சின் வருகைக்குப்பிறகு, காங்கிரசார் வாடிக்கிடப்பதுபோல் நாமிருக்கக்காரணமில்லை. நாம் அதிகமாக ஏதும் எதிர்பார்க்கவில்லை. அரசியலில் ஏமாளியாக இருக்க நமது கட்சி என்றைக்கும் இசைந்ததில்லை, இசையப்போவதுமில்லை. நமது கட்சி, கானலை நீரெனக்கருதி அலையாது, மயக்குபவரைக்கண்டு மலைக்காது.

காங்கிரசாருக்கோ, திடீர்க்காதல் ஏற்படும், உடனே மனமுறிவு உண்டாகும், காமமேலீடுகள் எழும் உடனே வேதாந்த விசாரம் உண்டாகும், இத்தகைய குணாதிசயங்களைக், காங்கிரசின் கொள்கை மாற்றங்கள், திட்டங்கள் தீக்கிரையானது ஆகியவைகளைக்கவனிப்போர் உணர்வர்.

எனவே, அவர்கள், சர். கிரிப்ஸ்வரப்போகிறார் என்ற செய்தி வெளிவந்ததும் ஆனந்தத்தாண்டவமாடினர். அதுகண்டு நாம், இது இப்போது, பிறகு யாது நடக்கிறதோபார்ப்போம், என்று கருதினோம்.

லீக், திராவிடக்கட்சி, ஆதிதிராவிடச்சங்கம், ஆகிய எதையும் சர். கிரிப்ஸ், ஆதரிக்கமாட்டார். காங்கிரசே இந்தியாவின் ஏகப்பிரதிநிதி என்றுரைப்பார். சீமையிலேயே நமக்காகப் போராடினவர், இங்கு வந்தால், கைமேல்கனி கிடைக்குமென்று கூறினர். இப்போது?

சர். கிரிப்ஸ், சிரித்துக்கொண்டே நம்மைச்சித்திரவதை செய்துவிட்டார். நாட்டைத்துண்டாடும் திட்டத்தை நீட்டுகிறார். பொறுப்பைத்தர மறுக்கிறார், இவரது புன்சிரிப்பு யாருக்குவேண்டும்? இந்த இலட்சணமான திட்டத்தை எடுத்துக்கொண்டு இங்கு ஏன் வந்தார். போய்வரட்டும், கிரிப்ஸ்துரை! போதும் அவரது உறவு! என்றும், மற்றும்பலவும் பேசுகின்றனர், தேசபக்தியை, அறிவைவிட அதிகசக்திவாய்ந்ததெனக்கருதும் காங்கிரசார்.

சர். கிரிப்ஸ், வருவதற்குள், நாட்டிலே பல கட்சிகளும் கலந்துபேசி, ஒரு பொதுத்திட்டத்தைத் தயாரித்திருந்தால், இன்று கிரிப்ஸ் திட்டம் குற்றுயிராகக்

கிடக்க நேரிடாது, காங்கிரசும், கண்கலங்க நேரிட்டிராது. பேராசை பெருநஷ்டம் என்பது பெரியோர்களின் வாக்கு, அதை மறந்தது காங்கிரஸ்.

கிரிப்ஸ் திட்டம், நமக்கோ, முஸ்லீம் லீகுக்கோ, பூரணத்திருப்தி அளித்துவிடக்கூடியதென்று நாம் கூறவில்லை.

சர்க்கசிலே, கம்பிமீது நடக்கும் வித்தைக்காரர் போல், சர். கிரிப்ஸ், இந்திய அரசியல் சிக்கலின்மீது நின்று கொண்டு தாண்டவமாடுகிறார். மற்றவர்களை விடச்சற்று சாமர்த்தியமாக இவர் ஆடுகிறார்! ஆனால் சிக்கல்தீரா முன்னம், இந்திய அரசியல் நல்லமுறையில் இராது.

காங்கிரஸ் காரியக்கமிட்டி, இப்போதைய கிரிப்ஸ் திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டதாம்.

எதிர்கால அரசியல் திட்டம் எங்ஙனமிருப்பினும் இப்போது, இந்தியப் பாதுகாப்புப் பொறுப்பை, இந்தியரிடம்ஒப்புவிக்க வேண்டுமாம். இந்தமாற்றம் நேரிட்டால், காங்கிரஸ் இணங்குமாம். சர். கிரிப்சும், இன்னம் சில தினங்களில், சிக்கல்கள் தீர்ந்துவிடுமென்று கூறுகிறார். நம்பிக்கை நல்லதோர் மருந்து என்பதை நாமறிவோம். நடப்பது எதுவெனக்கண்டு, பிறகு நமது கருத்தை வெளியிடுவோம். நமது தலைவர்கள், சர். கிரிப்சினிடம், திராவிடநாடு தனிநாடாக அமைதல் வேண்டுமென்பதை வற்புறுத்தி உரைத்தனர் என்பது கேட்டுப் பெருமகிழ்வடைகிறோம், நமது தலைவர்கள் செய்யும் முடிவு, திராவிடச்சமுதாயத்துக்கு ஏற்றதாகவே இருக்கும், அந்த முடிவுதெரிந்து, திராவிடர், திரண்டெழுந்து, தலைவரின் ஆணைப்படி நடப்பர் என்பதில் நமக்குச்சந்தேகமில்லை. நமது எதிர்காலவாழ்வுபற்றி இன்று போரிடும், நால்வரும், நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்து, சர். கிரிப்சிடம் பேசியதும் பிறவுமாகியவைகள் பற்றிப்பிரசாரம் புரியவேண்டுகிறோம். தமிழகம், நால்வரின் நாதத்தைக் கேட்டு இன்புற, எழுச்சிபெறத் தயாராக இருக்கிறது.

சர். கிரிப்சின் திட்டத்தை ஏற்பதும் ஏற்காததும், கட்சியின் தீர்ப்பைப் பொறுத்திருக்கிறது. ஆனால், எதுஎப்படியிருப்பினும், சர். கிரிப்ஸ், மூன்று அடிப்படையான உண்மைகளை உணர்ந்து உரைத்திருப்பது கண்டு மகிழ்கிறோம்.

(1) இந்தியா ஒரு உபகண்டம்.

(2) இங்குபல இனமக்கள் வாழ்கின்றனர்.

(3) கூட்டாட்சியில் சேர எந்த மண்டலமேனும் மறுத்தால், அது தனிநாடாக அமைதலே முறை என்ற இம்மூன்று அடிப்படை உண்மைகள் மறுக்கவோ, மறைக்கவோ முடியாதபடி வெளியாகி விட்டன.

சர். கிரிப்சின் திட்டத்தின்படி திராவிட நாடு நமக்குக்கிடைப்பதாயின் பொன்னேபோல்போற்றிவரவேற்போம். இல்லையேல், நமதுஇன எழுச்சியை உலகு அறியும் வண்ணம், வீறுகொண்டு மிளிரச்செய்வோம் நமது இனத்தின் முற்காலச் சிறப்புகளின் மறுபதிப்புகள் இயற்றுவோம். கிரிப்சுகள் பலர்கூடி நின்றுதடுத்தாலும் நில்லோம். பகைவெல்வோம். பார்புகழ, திராவிடநாட்டை அமைத்தே காட்டுவோம்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு, நமது பிரிவினைத் திட்டத்தைப்பற்றி ஏளனம் செய்தனர் ஏமாளிகள்! கண்டித்தனர் கசடர்கள்! எலிவளை எலிகளுக்கே என்று குறும்பு மொழிந்தனர்.

இதோ காணீர் அந்த எலி, இரண்டாண்டுகளுக்குள், புலியெனப் பாயத்தொடங்கி விட்டது. இரண்டே ஆண்டுகளுக்குள் அதற்கெனப் பிரத்தியேகப் பிரசாரமோ, படைதிரட்டலோ இல்லாமற் போயுங் கூட திராவிடநாடு தனிநாடாக அமைதல் வேண்டும் என்ற நமது கோரிக்கை, பிரிட்டிஷ் தூதராலும் ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது. சர். கிரிப்ஸ், ஜஸ்டிஸ் கட்சிக்கு நண்பரல்ல! ஆனால் அவர் நீதிக்கு விரோதியாக முடியாது! நீதியின் வழி நிற்கவிரும்புவோர் நமது உரிமையை மறுக்கத் துணியார்.

பாகிஸ்தான்-திராவிடஸ்தான்-இடையே ஆரியஸ்தான் என்று மூன்று மண்டலங்கள் அமைவதே, நாட்டின் எதிர்காலத்தில் அமைதியை நிலைநாட்டும். பிறதிட்டங்கள், அமளியைத்தூண்டிவிடும். நாட்டின் எதிர்காலம் இவ்விதமான மூன்று தரணிகள் கொண்ட முறையாகவே இருத்தல் வேண்டும். நமது நாட்டை நாமாள விரும்புவது நமதுபிறப்புரிமை. அதைமறுக்க யாருக்கும் உரிமை இல்லை.

போரின் போக்கு பயங்கரமான தாகிக்கொண்டே வருகிறது! வீரரஷியர்களை வசந்தகாலத்தில் வாட்டி வதைக்க, வன்னெஞ்ச நாஜிப்படைகள் வண்டி வண்டியாகச் செல்கின்றன. கருங்கடலைக் கடக்கவும், காகசஸ் கரையோரம் சேரவும், நாஜிகள் தமது ராணுவத்தையும் ராஜதந்திரத்தையும் ஏவுகின்றனர். பல்கேரியா, ருமேனியா, துறைமுகங்களில் அச்சுநாட்டுக் கப்பல்கள் அணி அணியாக உள்ளனவாம். கடற்கோட்டைகளான மால்ட்டா, ஜிப்ரால்டர், ஆகியவைமீது நாஜி விமானங்கள் குண்டுமாரி பொழிகின்றன. எகிப்திலும் சிரியாவிலும் நாஜிகள் தமது படைகளை ஏவதிட்டமிட்டுள்ளனர் என்றும், டார்டனல்ஸ் ஜலசந்தி வழியாக அச்சுக்கப்பல்கள் போக அனுமதிதரும்படி, வான்பேபன், துருக்கி சர்க்காரிடம் காவடி எடுப்பதாகவும், இதற்கு 'இலஞ்சமாக' கிரீசில் சில பிரதேசங்களைத் துருக்கிக்குத்தர இசைவதாகவும்தெரிகிறது.

மேற்கே இதுவெனில், கிழக்கிலோ, ஜப்பானின் வேகம் குறையக்காணோம். பர்மாவில் ஜப்பானியப் படைகளைச் சீனர் எதிர்த்துநின்ற போதிலும், ஜப்பானிய முற்போக்கு குறையக்காணோம். அந்தமான் வீழ்ந்துவிட்டது. தென்னிந்தியாபூராவும்திகில்கொண்டு வதைகிறது. இத்தகைய நிலைமையில்,நாட்டுப் பாதுகாப்புக்காக, பிரிட்டிஷார், ஒருகட்சியின் தனிநபரை அதிகாரியாக்குவதைவிட, சகலகட்சிகளின் தலைவர்கள்கொண்ட, நாட்டுப்பாதுகாப்புக் கழகத்தை உடனே அமைத்து, அந்தக் கழகத்தின் பொறுப்பில். படைதிரட்டுவது, உள்நாட்டுப்பாதுகாப்பு, பணந்திரட்டுவது பீதியைத் தடுப்பது ஆகிய பணிகளை ஆற்றும் பொறுப்பை ஒப்படைத்தலே முறை.

இடைக்கால இடரைப்போக்க, இம்முறையில், ஜனாப்ஜின்னா, பெரியார், டாக்டர் அம்பேத்கார், பண்டித ஜவஹர், M. N. ராய், சர். சண்முகம், சர். K. V. ரெட்டி, ஆகியோர் கொண்ட நாட்டுப் பாதுகாப்புக் கழகத்தை சர்க்கார் அமைத்துவிட்டு, போர் முடிந்ததும், முஸ்லீம்களுக்குப்பாகிஸ்தான், திராவிடருக்குத் திராவிடஸ்தான், ஆரியருக்கு ஆரியஸ்தான் அமைத்துத் தரப்படும் என்று வாக்குறுதியும் தந்துவிட்டு சரிதம், இலக்கியம் ஆகியவற்றைச்சாட்சியாகக் கொண்டு, மூன்றுமண்டலஅமைப்பு ஏற்படச்செய்தால். என்றென்றும் பிரிட்டிஷ் புகழ் மங்காதிருக்கும். காங்கிரசின் கண்சிமிட்டலையோ, கண்பிசைவதையோகண்டு, பிறகட்சியினரை ஒதுக்கிவிட்டு, ஆரிய-ஆங்கிலேய ஆலிங்கனம் நடைபெற்றால் நாடு தாங்காது, அன்று ஏற்படக்கூடிய கொதிப்பை: சர். கிரிப்ஸ், நெருப்புடன் விளையாடமாட்டார் என்றே நம்புகிறோம். காங்கிரசார், கனவில் கண்ட கன்னியைக் காணோமே என்று கலங்குகின்றனர். ஆனால் அவர்கள், எந்தநேரத்திலும் வளைந்துகொடுக்கும் வகை கற்றவர்கள். எனவே, பிரிட்டிஷ் சர்க்கார், ஏமாறாமல் இருக்கவேண்டும். இல்லையேல், இஸ்லாமியர், திராவிடர் ஆகியோரின் அன்பை இழக்கவேண்டி நேரிடும். அதுபோய், மற்றதெது விருப்பினும், நீரில்லா ஆறு, நிலவில்லாவானம், உப்பில்லாப் பண்டம், போன்றதே யாகும்!

## பட்டுக் கோட்டையில் செல்வம் நினைவுநாள்.

(நமது நிருபர்.)

செல்வம் நினைவுநாள், 31—3—42 மாலே, பட்டுக் கோட்டையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலையில், ஏழைகளுக்கு அன்னமிடப்பட்டது மாலையில், அலங்கரித்த மோட்டாரில், செல்வம் படத்தை அமைத்து, ஊர்வலம் நடத்தப்பட்டது. செங்கொடி தாங்கிய தொண்டர்கள், தமிழ் முழக்கம் செய்துவந்தனர். பிறகு காசாங்குள மைதானத்தில், தோழர் ராமசாமித்தேவர் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் குழந்தை பாரதிதாசனின் கவிதையைப் பாடி, மக்களைப் பரவசப்படுத்தினர் தோழர் N. B காளியப்பன், செல்வம் நினைவுநாள் விஷயமாகப் பேசினர். பிறகு தோழர் C. N. அண்ணுதுரை செல்வம்தந்த செல்வம் எனும் பொருள்பற்றிப் பேசினர். 'திரு' என்ற அடைமொழியே தமிழருக்குத் தேவை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தோழர் சுந்தரநாடார், தோழியர் தனபாக்கியத்தம்மாள் ஆகியோரின் மரணங்குறித்து அனுதாபத்தீர்மானங்கள் நிறைவேறின. தலைவரின் முடிவுரைக்குப்பிறகு, தோழர் பாலகிருஷ்ணன் நன்றி கூறியபிறகு கூட்டம் இனிது முடிந்தது.

இரவு. தோழர் விஸ்வம் அவர்கள் இல்லத்தில் தோழர் அண்ணுதுரைக்கும் மற்றைய தோழர்களுக்கும் விருந்து நடத்தப்பட்டது.

### கலைமகள் கழகம்

இரவு 10மணிக்கு. பட்டுக்கோட்டை. கலைமகள் கழகத்தில் தோழர் மாப்பிளையன் தலைமையில். தோழர் C. N. அண்ணுத்துரை. "பண்டைத் தமிழகம்" என்பதுபற்றிப் பேசினர்.

---

### ரோமாபுரி ராணிகளின் லீலாவிநோதம்

5ம் பக்கத் தொடர்ச்சி.

யாகத் தானிருக்கக்கூடாது அரசாளும் உரிமை தனக்கு இருத்தல்போல் தன்மக்களுக்கே போய்ச் சேரவேண்டும் என்று திட்டமிட்டு வேலைசெய்தாள், அந்தப்பட்டாடை அணிந்த ராசதந்திரி! அவளது இந்த ஆழ்ந்த கருத்தை அகஸ்டஸ் கண்டுகொள்ள முடியவில்லை. புறத்தைக்கண்டு பூரித்தான், அகத்திலே இருந்த அரவம் அவனுக்குத் தெரியாது!

இந்த நோக்கத்துடன், லிவியா, முதல் புருடன் மூலமாகத் தனக்குதித்த **டைபீரியஸ். டுருசஸ்,** என்ற இரு மைந்தருக்கும், விசேஷ அதிகாரத்தை வாங்கித் தந்தாள். அகஸ்டசுக்குப் பிறகு, அரசு, இவ்விருவருக்கே போய்ச்சேர வேண்டும் என்பது லிவியாவின் எண்ணம். ஆனால், சிங்காதனத்தருகே வேறொருவன் இருக்கக் கண்டாள் லிவியா. அகஸ்டசின் மருமகன் **மார்சேலஸ்** என்ற இளவரசனே, எதிர்கால அரசன் என்று எவரும் எண்ணினர். அகஸ்டஸ், தனது முதல்மனைவி மூலம் பிறந்த மகளை மார்செலசுக்கு மணஞ்செய்து கொடுத்திருந்ததோடு, அவனிடம் அன்புகொண்டிருந்தான். லிவியா இதனைக்கண்டாள்! வெளிப்படையாக ஒன்றும் கூறவில்லை. மார்செலஸ்மீது மனத்தாங்கல் இருப்பதாகக் காட்டிக்கொள்ளவில்லை, சூது நிறைந்த அவளது உள்ளமாகிய குடத்தில், ஒரு தளும்புதலும் எழவில்லை. ஆனால், திடீரென, மார்செலஸ் மாண்டுவிட்டான்! மரணம், அவனை அணுகியதற்குக் காரணம் லிவியா என்று பிற்காலத்திலே பேசிக்கொள்ளப்பட்டது. அக்காலத்திலே ஒரு சிலர் மட்டுமே, சந்தேகப்பட்டனர். இதற்குள், லிவியாவின் இருபுதல்வர்களுள், **டுருசியஸ்** என்பான், இறந்துவிட்டான். மனமுடைந்த லிவியா, ஒரே மகனாய் விளங்கிய **டைபீரியசை** எப்படியேனும் முடிசூட்டிக்காணவேண்டுமென்று துடித்தாள். ஆனால், அகஸ்டசின் மகள் வயற்றுப் பேரப்பிள்ளைகள் இருவர், **கேயஸ், லூசியஸ்** என்பவர்கள் இருந்தனர். டைபீரியசுக்கும் ரோம் சாம்ராஜ்ய சிங்காதனத்துக்குமிடையே இருந்தஇந்த இருவரும், திடீரென இறந்து விட்டனர்! லிவியாமீது சந்தேகந்தான், ஆனால் ஏதேனும் சொல்லத்துணியும் நாக்குத்துண்டிக்கப்பட்டு விடும்!

கடைசியாக, ஒரே ஒரு வாலிபன் இருந்தான் போட்டிக்கு. இது, அகஸ்டசின் கடைசிப்பேரப்பிள்ளையான **அக்ரிப்பா** என்பவனாவன். அகஸ்டஸ் அக்ரிப்பாவையும், லிவியாவின் மகன் **டைபீரியசை**யும், தத்துப்பிள்ளைகளாக்கிக்கொண்டான், இருவரும், சேர்ந்து இராசபோகத்தை அனுபவிக்கட்டும் என்று எண்ணினான். லிவியாவுக்கு இதுவும் சம்மதமில்லை! எனவே தனது சாகசத்தை ஏவி, **அக்ரிப்பாவை** நாடு கடத்தும்படி, அகஸ்டசைத் தூண்டினாள்; அகஸ்டசும் இசைந்தான்.

நரம்புகளின் முறுக்கு மங்கி, கண்பஞ்சடைந்து, காலத்தின் அழைப்பு, காதில் கேட்டுக்கொண்டிருந்த அந்தியநாட்களில், அகஸ்டஸ், தனது அருமைப்பேரப்பிள்ளைகள் திடீர் திடீரென மாண்டது பற்றியும், லிவியாவின் வஞ்சனைகள் பற்றியும், எண்ணலானான். அவன் மனம் அவனைச்சுட்டது. நாடு கடத்திய அக்ரிப்பாமீது நாட்டம் சென்றது. யாருக்கும் தெரியாமல் அகஸ்டசஸ், அக்ரிப்பாவை அவனிருந்த இடம் சென்று கண்டு பேசிவிட்டுத்திரும்பினான். தனது சக்தி ஒடுங்கிப்போவதையும், லிவியா, சூதான திட்டத்தால், ரோம் சாம்ராச்ய ஆட்சியைத்தனது வம்சத்துக்கு அபகரித்துக் கொள்ள இருப்பதையும் எண்ணி ஏங்கினான்! அகஸ்டஸ், அக்ரிப்பாவை இரகசியமாகச் சந்தித்த செய்தி, லிவியாவின் செவிக்கு எட்டியது. பல ஆண்டுகளாகப் பாடுபட்டு, பழமாக்கிய திட்டத்தை, இந்தப்படுகிழம் பாழாக்குவதா என்றெண்ணிப்பதைத்தாள். அகஸ்டஸ் கடைசிநேரத்தில், தனது பேரனிடம் பேரரசை ஒப்புவித்துவிட்டால், தன்கதி, தன் மகனின் கதி என்னாகும் என எண்ணி ஏங்கினாள். அகஸ்டசின் ஏக்கம், லிவியாவின் ஏக்கம், இரண்டுக்கும் மருந்தொன்கிடைத்தது அகஸ்டசுக்கு மரணம்! அவன் உண்ட அத்திப்பழம் விஷங்கலந்தது! அதைக்தந்தது லிவியாவே! உயிருடன் இருந்த அகஸ்டஸ் தந்த அதிகாரத்தை, அவனது பிணம், காப்பபடுத்திற்று. காதகி தந்த கனியால், காவலர் பலர் அஞ்சக் கொடிகட்டி ஆண்ட அகஸ்டஸ், இறந்தான்! இருந்தபோது பெற்றதை, இறந்தபின் இழக்காதிருக்க இது செய்தே தீரவேண்டி நேரிட்டது என்று லிவியா மனதில் கருதிக்கொண்டு, மகத்தான ரோம் சாம்ராச்யத்தின் மணிமுடி, தனது மகன் டைபீரியசுக்குக்கிடைத்தது பற்றிக் குதூகலித்தாள்! அந்த மணிமுடிதரித்து, மண்டலத்தோர் பலர் கட்டியங்கூறி நிற்க அரசோச்சிய அகஸ்டஸ், பெண்பேயால் பிணமானன்!!

---

## 11—4—42

## சிதம்பரம் வாரீர்!

சர். கிரிப்சின் திட்டம் பற்றிப் **பெரியார்** கருத்து என்ன? திராவிடநாட்டுப் பிரிவினை உண்டா? இல்லையா? என்று ஆவலோடு கேட்கும் அருமைத் தோழர்களே! சிதம்பரம் வாரீர்!

### பெரியாரும் பாண்டியனும்.

டில்லியில் நடைபெற்ற பேச்சுபற்றி சொற்பொழி வாற்றுவர். அந்த அரிய சந்தர்ப்பத்தை சிதம்பரம் மாநாடே முதன் முதலாகப் பெருகிறது.

புரட்சிக்கவி பாரதிதாசனின் தலைமையில் சுயமரியாதை மாநாடு! சொல்லவேண்டுமோ சுவையை!!

அஞ்சா நெஞ்சும் ஆவேசப்பேச்சும் தனக்கே உரித்தான அழகிரிசாமி வருகிறார்! திரண்டு வருக!

**௭. V. லிங்கம்.**

# குமாஸ்தாவின் பெண்தான்

அல்லது

## கொலைகாரியின் குறிப்புகள்.

(சௌமியன்.)

4

முன்பு

[கள்ளப்புருடனைக் கொலை செய்ததற்காகத் தூக்குத்தண்டனை பெற்ற காந்தா—தனது வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறாள். அதில், மணமாகா முன்னம், சோமசுந்தரம் என்ற வாலிபனைக்காதலித்தபகுதி தீட்டப்பட்டிருந்தது. அதுஇது.]

காதல் விஷயமாக நான் பல கதைகளில் படித்திருக்கிறேன். துஷ்யந்தன் சகுந்தலையைக் கண்ட கதை, நளதமயந்திகதை, இராமச்சந்திரன் சீதாபிராட்டியார் கதை, சத்தியவான் சாவித்ரி கதை, என்று பல படித்துமிருக்கிறேன். ஆனால் அவைகளிலெல்லாம், கடவுள் கைகொடுத்துதவினார் என்று தான் கூறப்பட்டிருக்கிறது. அதைப்போல், அபலையாகிய என் பொருட்டு அவர் செய்வாரா? அவ்வளவு அக்கரை ஆண்டவனுக்கு என்னிடம் இருந்தால், எங்கள் வறுமையை முதலில் ஓட்டிவிட்டு மறுவேலை பார்க்கமாட்டாரா! அதையே செய்யாதவர், அவருக்கிருக்கிற வேறு எத்தனையோ வேலைகளை ஒதுக்கிவைத்துவிட்டு, என்மீது சோமுவுக்கு அன்பு உண்டாகும்படி செய்ய முன்வரவா போகிறார்! நடக்கிற விஷயமா? சோமுவுக்கும் எனக்கும் மணம் நடந்து கதைகளிலே கூறப்படுவதுபோல், கஷ்டங்கள் ஏற்பட்டால் கூடப்பொறுத்துக் கொள்ளலாம் என்று நான் எண்ணினேன்.

வறுமையின் காரணத்தால், எனக்கு, உலகின் மற்றையக்காட்சிகளைக்காண, நேரமோ, வசதியோ கிடையாது. மனமகிழ்ச்சிக்கு வேறு மார்க்கமும் கிடையாது. செல்வவான் வீட்டுப் பெண்ணாக இருந்தால், மனக்கவலை தோன்றாதபடி, நாடகம், சினிமா பார்க்கலாம், நகை நட்டு போட்டுக்கொண்டு ஆனந்திக்கலாம், கிளப்புக்குப்போய் பந்தாடலாம்; கடற்கரைக்குப்போய் உலவலாம், கிராமபோன்கேட்கலாம், ரேடியோ கேட்கலாம், ஊர்வம்பு பேசலாம், உல்லாசத்துக்கு எத்தனையோ வழிகள்உண்டு. எனக்கோ, பணமின்றிப் பெறக்கூடிய ஒரே இன்பந்தான் இருந்தது. அது தான், சோமுவைப்பற்றிய நினைப்பு, அவரைப்பார்ப்பது, அவரைப்பற்றிப் பேசுவது, அவர் விஷயமாக, தங்கையோ, அம்மா அப்பாவோ பேசினால், காதுகுளிரக்கேட்பது, இதுவே எனக்கிருந்த இன்பம். இந்த இன்பம், விநாடிக்கு விநாடி வளர்ந்தது. நான் பரிபூரணமாக அவருடைய அடிமையாகி விட்டேன். சோமு, மிக நல்லவர் என்று சொன்னேனே, அது தவறு, என்னைக்கவர்ந்தவன், எப்படி நல்லவனாக முடியும்!

சோமுவின் மீது எனக்கு வளர்ந்து வந்தகாதல் என் மனதில் ஆழமாகப்பதிய ஆரம்பித்து விட்டது. சில சமயங்களில், அவருடைய தரிசனத்துக்காக நான், ஏங்கித்தவிப்பதுண்டு. முக்கியமாக அவர், பூசை செய்யச் சென்றுவிட்டால், குறைந்தது இரண்டுமணிநேரமாகும், வாசலுக்குவர. அதுவரை அவரைக்காண முடியாமல், நான் படும் பாட்டை அவர் எப்படி அறிவார். காதல் பலப்பட்டது, கலக்கமும் அதிகரித்தது. நான் அவர்மீது மையல்கொண்டு என்ன பயன்? சோமு, எந்தச்சீமாட்டிவீட்டுச்சிங்காரிக்குங் கணவனாகப்போகிறாரோ? என் எண்ணம் எப்படி ஈடேறும்? கடைசியில், என் கருத்து ஈடேறவில்லையானால், என் மனம் உடைந்துவிடுமே, அதற்கென்ன செய்வது?

இத்தகைய கலக்கத்தினால், பலஇரவுகளில் நான் அழுததுண்டு. பெரியதோர் ஆபத்தில் நான் சிக்கிக்கொண்டதை உணர்ந்தேன். சோமுவின் மனநிலையோ எனக்குத் தெரியாது, தெரிந்துகொள்ள மார்க்கமுமில்லை. அவர் தமது 'பக்தி' யைக்காட்டிக்கொள்ள, கட்டுக்கட்டாக விபூதி பூசிக்கொண்டு, காலணா அளவுள்ள சந்தனபொட்டிட்டுக் கொண்டிருந்தார், என் விஷயமாக, அவர், என்ன கருத்துக்கொண்டிருக்கிறார் என்பதைக்காட்ட, ஒரு அடையாளமும் தென்படவில்லை. பல வஸ்துக்களை அவர் பார்ப்பதுபோல், என்னையும் பார்த்தாரே தவிர, அவருடைய பார்வையிலே தனி விசேஷம் இருக்கவில்லை. கண்ணால் பேசியிருக்கலாம், மனம் இருந்தால். அவரோ, பக்தர்களின் பாடலைக் கேட்டுக்கேட்டு, மௌனமாக இருக்கும் பழக்கங்கொண்ட தேவன்போல், என் கண்களின் வேண்டுகோளைக் கண்டும், அசையாத உள்ளங்கொண்டவராகவே இருந்தார். நான், அப்படியொன்றும், அழகற்றவளுமல்ல!

என் மனக்குறையைத் தீர்க்க யார் முன்வருவார்கள்? ஒரு சமயம், எனது, ஆழ்ந்த, இருதயபூர்வமான காதல், சோமுவுக்குத்தெரிய நேரிட்டால், என்னை மகிழ்விக்க இசைவாரோ! ஆனால், எப்படி அவரிடம் என் காதலைத்தெரிவிப்பது. மிக சாந்தகுணசீலராகிய சோமு, என்னைப்பற்றித்தவறாகக் கருதிவிட்டால், என்ன செய்வது? வீட்டிலே, அம்மா அப்பாதான் என்ன சொல்லமாட்டார்கள்? ஊராரும் ஏசுவார்களே! நான் என்ன செய்வேன்! சோமுவை மறந்துவிடவும் முடியவில்லை, மனநிலையை அவருக்குத் தெரிவிக்க, மார்க்கமும் தோன்றவில்லை. நான் தத்தளித்தேன். சாந்தாவுக்கு நான் இவைகளைக் கூறவில்லை. ஆனால் என் பெருமூச்சும், கண் அடிக்கடி எதிர் வீட்டின்மீது ஏக்கத்தோடு செல்வதும், இரவில், என் தலையணை நனைந்து போவதும், என் மனதில் இருந்த எண்ணங்களைச் சாந்தாவுக்குத் தெரிவித்து விட்டன. அவளோ சிறுபெண்! அவளால் என்ன செய்யமுடியும்!

சாந்தா எப்போதாவது சோமுவிடமிருந்து புத்தகம் வாங்கிக்கொண்டு வருவாள். பெரிதும் புராணக் கதைகளே சோமு தருவார். ஒரு நாள் எனக்கோர் யுக்திதோன்றிற்று. கண்ணபிரான்மீது காதல்கொண்ட உருக்மணியின், மனோ நிலை வர்ணிக்கப்பட்டிருந்த பாகத்தைச், சோமுதந்தனுப்பிய பாரதத்தில், நான், பென்சிலால் கோடிட்டு அனுப்பினேன். அப்போது என்நெஞ்சம் துடித்ததை என்னென்பேன். அவர் அதனைக்கவனிப்பாரா? கவனித்தாலும், விஷயம் இன்னதென்று புரிந்து கொள்வாரா? புரிந்துகொண்டால், புன்னகை புரிவாரா? துஷ்டச்சிறுக்கி என்று என்மீது சீறுவாரா? அலமுவிடம் காட்டிவிடுவாரோ? அப்பாவிடம், உன் மகளின் போக்யதையைப்பார் என்று கூறுவாரோ? என்ன நடக்குமோ என்று பயமாகவே இருந்தது. நான் கோடிட்டு அனுப்பிய பாகத்தில், ஆபாசமான வார்த்தைகள் ஏதும் இல்லை.

"கண்ணன்மீது நான் கொண்டுள்ள காதலின் ஆழம், கடலாழத்தைவிடப்பெரியது. அவரே என் ஆவி. அவர் இன்றி நான்வாழேன். ஆனால், அந்தோ, என் மனநிலை அவருக்குத் தெரியுமோ? தெரியவந்தால், அவர் என் காதலை ஏற்றுக்கொள்வாரோ, ஏளனஞ்செய்வாரோ? என் செய்தியை அவரிடங்கூற யார் இருக்கிறார்கள்? இரவுக்காலங்களில் என்னை வாட்டிகுவளைதக்கும் நிலவே! கனல்போல் வீசிக்கருத்தைக் கெடுக்கும் காற்றே! பொறுமை மூழ்ப்படி உன் சக்

(4-ம் பக்கம் பார்க்க)

## நமது ஏஜண்டுகள்

"திராவிடநாடு" பத்திரிகைக்குக், கீழ்க்காணும் தோழர்கள் ஏஜண்டாக இருக்க இசைந்துள்ளார்கள். அவர்களிடம் பத்திரிகைகள் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | காஞ்சீபுரம் | — | தோழர்கள், கோவிந்தசாமி |
| 2 | போளூர் | — | K. சுப்பிரமணியம் |
| 3. | சிதம்பரம் | — | M. K. சுந்தரம் |
| 4 | ஜலகண்டாபுரம் | — | J. P. கிருஷ்ணன் |
| 5 | திருவாரூர் | — | T. N. லெட்சப்பா |
| 6. | ஈரோடு | — | M. அலிபீர் கனிசாகிப் |
| 7. | திருச்சி, சீரங்கம், பொன்மலை | — | S. பரமசிவம் |
| 8 | சேலம் | — | P. M சொக்கலிங்கமுதலியார் |
| 9 | திருநெல்வேலி | — | வெங்கையா அருளகம் |
| 10. | தூத்துக்குடி | — | P. சாமுவேல் |
| 11. | விருதுநகர் | — | A. சண்முகசுந்தரம் |
| 12. | திண்டுக்கல் | — | M. வீரபத்திரபிள்ளை |
| 13. | கோபிசெட்டிபாளையம் | — | T. நஞ்சுண்ட கவுண்டர் |
| 14. | கும்பகோணம் | — | K K. நீலமேகம் |
| 15. | வேலூர் | — | N சுந்தரமூர்த்தி |
| 16. | விருத்தாசலம் | — | C. முனுசாமி |
| 17 | தஞ்சாவூர் | — | T. V. ஜெகநாதன் |
| 18. | திருவண்ணாமலை | — | R. S. நடேசன் |
| 19. | மதுரை | — | A. வேணுகோபால் |
| 20. | நாகப்பட்டினம் | — | V. A ஏஹியா சாயபு |
| 21. | பட்டுக்கோட்டை | — | M. இராமமிருதம் |
| 22. | பொள்ளாச்சி | — | நடராசச் செட்டியார் |
| 23 | உடுமலைப்பேட்டை | — | P. P இராமசாமி நாடார் |
| 24. | மன்னார்குடி | — | ஜெயராம நாயுடு |
| 25 | கோயம்புத்தூர் | — | E உசேன்கான் சாகிப் |
| 26 | திருப்பத்தூர் (வ. ஆ.) | — | K. R இராசகோபாலன் |
| 27. | கரூர் | — | S. R. முத்துச்சாமி |
| 28 | ஆரணி | — | M. சின்னப்பாசெட்டியார் |
| 29 | காரைக்கால் | — | M. அப்துல் ரசாக் |
| 30. | நாமக்கல் | — | R. துரைசாமி நாயுடு |
| 31. | மாயவரம் | — | G. இராசகோபால் பிள்ளை |
| 32. | கடலூர் O. T. | — | K. V. கார்த்திகேயன் |
| 33 | திருத்துறைப்பூண்டி | — | K. N. ஷண்முகம் |
| 34. | கொடவாசல் | — | T. கோவிந்தசாமிப்பிள்ளை |
| 35. | திருக்கழுக்குன்றம் | — | K. S. துரைசாமி |
| 36 | இராசிபுரம் | — | S. துரைசாமி |
| 37. | ஆண்டர்சன்பேட்டை | — | P. A. முகமத்சிராஜுதீன். |
| 38. | பம்பாய், தாராவி | — | A. S. சண்முகம் |
| 39. | திண்டிவனம் | — | A. தங்கவேல் ஆச்சாரி |
| 40 | சாத்தூர் | — | P. இராசாமணி |

மற்ற ஊர்களுக்கு டிபாசிட் கட்டக்கூடிய, அனுபவமும், சுறுசுறுப்புமுள்ள, ஏசண்டுகள் தேவை. விவரங்கட்கு எழுதுக.

திராவிடநாடு நிலையம்,
51, நிமந்தக்காரத் தெரு,
சின்னக்காஞ்சிபுரம்

---

## காஞ்சிபுரச் செய்திகள்.

இவ்வூர், சிவன்கோவில் விழா இம்முறை மிகச்சுருக்கமான முறையில் நடைபெற்றது. A. R. P. திட்டம் அமுலில் இருப்பதால். இரவு உற்சவங்கள் படாடோபமின்றி நடக்கவேண்டி நேரிட்டுவிட்டது விளக்குகள் மூடிபோட்டுக் கொண்டன! செங்கோலுக்கு முன் சிவன்கோலும் செல்லவில்லை!!

### பாட்டும்!

தோழர். சுந்தரமூர்த்திஓதுவார், தேவாரப்பண் திவ்யமாகப் பாடுபவர். திருவிழாக்கள் அவருக்கு வாழ்க்கை வழிதருபவைகள். இசைவிருந்தை அவர் மக்களுக்கு ஊட்டுவதுடன், இம்முறை அறிவுவிருந்தும், ஊட்ட ஆசைப்பட்டு. போர் நிலைமைபற்றிப் பேசினாராம், பஜனையோடு பஜனையாக. ஆனால் அந்த வேடத்துக்கு அவர் பொருத்தமில்லை என்பதைத்தான் அன்று காட்டிக்கொண்டார். நமசிவாயா! நமசிவாயா!! என்று 9 முறை உச்சரித்தால், எதிரியின் குண்டு மக்கள் தலைமீது விழாது என்று கூறினாராம்! வேடிக்கையான பேச்சு! இதைநம்பி, யாரும், ஓதுவார் உள்பட எதிரியின் குண்டுவீச்சு நடக்கும்போது. வீதியிலே இருந்து கொண்டு நமசிவாயநாமத்தைக் கூறிக்கொண்டிருக்கக்கூடாது. குண்டுக்குத்தலையில் விழத்தெரியுமே தவிர இவரோர் சிவபக்தர் என்று கண்டுபிடித்து. அவர் தலையைவிட்டு வேறோர் பக்கம் விழத்தெரியாது? நமசிவாயநாமத்தைக் கூறிவிட்டால், அன்று நரி பரியான கதைநடந்தது என்கிறார்களே அது போல். குண்டு புஷ்பச்செண்டாக மாறிவிடாது! ஏசுவைக் கும்பிட்ட ஊரிலேயும். புத்தரைத் தொழுத ஊரிலேயும். குண்டு. செண்டாக மாறிவிடவில்லை. இங்கும் மாறாது! ஓதுவார். இதுபோன்ற "அபத்தத்தை" ப்பேசிக் கொண்டிராமல். அழகான தோடி ஆலாபனத்தையோ. 'அடுத்தானை' எனும் பண்ணையோ, அம்மையப்பரின் அருமை பெருமை பற்றியோ பாடட்டும்! பொருள் விசேடமில்லை என்றபோதிலும். அதிலே உள்ள இசை இன்பத்தைப்பருகி ஆனந்திப்போம்.

## A. R. P. அதிகாரி.

காஞ்சீபுரத்துக்குச்சர்க்காரால்நியமிக்கப்பட்டுள்ளA.R.P. ஆபீசர். A. R. P. வார்டன்கள், மெசன்சர்கள். நியமித்துக் கொண்டிருக்கிறார் A R. P. சம்பந்தமான விசேட பயிற்சி இவர்களுக்கு அளிக்கப்படும். தீயணைக்கும் என்ஜின்கள். நம் நகருக்குத் தருவிக்க. மேற்படி ஆபீசர் தீர்மானித்துள்ளார்.

## முஸ்லீம்களுக்குச் சங்கடம்

பெரியகாஞ்சீபுரம், அவுலியா தர்காபகுதியில் பன்றிகள் உலவித். தொல்லையும் அசுத்தமும் செய்வதால். அந்தப் பகுதி முஸ்லீம்கள் மனம் வருந்துகிறார்கள். காஞ்சீபுரம் நகர சபையார் இந்தச் சங்கடத்தைப் போக்க, முன்வரவேண்டுகிறோம்.

## சனாதனிகள் சலசலப்பு

சர். கிரிப்ஸ், சனாதனப் பிரதிநிதியை அழைக்கவில்லை என்று காஞ்சீபுரம் சனாதனிகள் கூட்டங்கூடிக் குமுறினர் என்று மித்திரன் கூறுகிறது. மதவிஷயத்தில். சர்க்கார் குறுக்கிடக்கூடாது என்று மேற்படி சனாதனிகள் கேட்டுக் கொண்டனராம். மக்கள் விஷயமாக இந்த "மதியூகிகள்" நுழையாமலிருக்கவேண்டும் என்று பகுத்தறிவாளர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள். திருநாமம் போட்டுக்கொண்டு திருத்துழாய் நீர்பருகி திருப்பல்லாண்டு பாடிக்கொண்டு கிடக்கட்டும் இந்தத்திருக் கூட்டம், ஆனால். மக்கள் விஷயமாக ஏதும் பேசாதிருக்கட்டும். கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளம் என்ன தெரியும்!

## திரட்டு

24.30000 இலட்சம் யேன் போர்ச்செலவுக்காக, அடுத்த ஆண்டு பட்ஜட்டில், ஜப்பான் சர்க்கார் ஒதுக்கிவைத்திருக்கிறதாம்.

52.000 ரஷியரை, கிருயாவில், ஜெர்மன் படைகள் கொலை செய்தனவாம்.

இந்த ஆண்டு பிரிட்டனில், அறுவடை வேலையில் 20000 பள்ளிமாணவர்கள் பங்கெடுத்துக் கொள்ளப்போகிறார்கள்.

திருநெல்வேலி ஜில்லா யுத்த ஆதரவு மாநாட்டில், பண்டைத் தமிழரின்போர்த்திறமைபற்றி சர். பி. டி. ராஜன், செந்தமிழில் சொற்பொழிவாற்றினார்.

ஆஸ்திரேலியாவைத்தாக்குவதுபோல் ஜப்பான்பாசாங்கு செய்கிறதே யொழிய, உண்மையான திட்டம் சிலோனையும் இந்தியாவையும் தாக்க வேண்டுமென்பதுதான், என்று ஜெனரல் ஸ்மட்ஸ் கூறுகிறார்.

அமெரிக்காவில் ஜப்பான் உளவாளர் ஸ்தாபனங்களின் மர்மங்கள் வெளிவந்துவிட்டன ஐந்தாம் படையினர் மீது சர்க்கார் கடுமையான நடவடிக்கை எடுப்பர்எனத் தெரிகிறது.

கடந்த 6 ஆண்டுகளாக சென்னையில் அமெரிக்க கான்சலாக இருந்துவந்த மிஸ்டர் கர்டிஸ ஜோர்டான் என்பவர், மெக்சிகோ (தென் அமெரிக்கா)வுக்கு மாற்றப்பட்டுவிட்டார். அவருக்குப் பதிலாக. சுமத்திராவிலிருந்து திரும்பிய மிஸ்டர் ஜான் பெல்டென் கெட்சாம், கான்சலாக நியமிக்கப்பட்டுள்ளார்!

போர் முடியுமட்டும், எந்தக் காரணத்தை முன்னிட்டும் வேலை நிறுத்தம செய்வதில்லை என்றும் அமெரிக்க தொழிலாளர் சங்கங்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

அறிவியற் பகுதி.

# இந்துமதமுந் தமிழரும்!

நக்கீரன்.

சென்ற வாரத் "திராவிடநாடு" இதழில் எனது தோழன் பரதன் கேட்டுக்கொண்டதற்கேற்ப, இவ்வாரத்திலிருந்து, இந்துமதம் தமிழ்மக்களுக்கு ஏற்புடையதுதானா என்பது பற்றிய கருத்துக்களை, **இந்துமதமுந் தமிழரும்**" என்ற தலைப்போடு எழுத முன் வந்துள்ளேன்.

இந்துமதமென்றால், அது எங்களுடையது என்றெண்ணி இறும்பூதெய்தி இருக்கும் தமிழ் மக்கள் பலர் நம்மைச் சூழ்ந்திருக்கின்றனர் என்பதை நாமறிவோம். இந்துமதமென்றால், அது ஆரியர்கள் தங்கள் வாழ்க்கைக் கப்பலை ஓட்டிச்செல்வதற்காக வெட்டிய ஒரு அகழ் என்பதை நம்மவர் பலர் இன்னுந் தெரிந்துகொள்ள முடியாத நிலையிலேயே இருக்கின்றனர் என்பதையும் நாம்அறிவோம். எனவே, இவ்விந்துமதத்தைப் பற்றிய உண்மைகளைத் தமிழ்மக்கள் அனைவரும் தெரிந்து தெளிதல் பெரிதும் இன்றியமையாததாகும்.

இவ் இந்துமதம் தமிழ்நாட்டிற் பரவிய காலம், ஆரியர்கள் நம் நாட்டில் வந்து குடியேறித் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கிய காலத்தைக் குறிப்பதாகும். ஆரியர்கள் நம் நாட்டுக்கு வருமுன் இந்துமதம் என்ற ஒரு மதமோ அன்றி வேறு மதங்களோ இருந்தன வென்று துணிவதற்குத் துளி சான்று கூடக்கிடையாது. ஆகையால், ஆரிய மதமாகிய இவ் இந்துமதத்தைத் தமிழ் மக்களுடைய மதம் என்று துணிந்துகூற, ஆராய்ச்சித்துறை கண்ட அறிவுடைய எவரும் முன்வரமாட்டார்கள். ஆரியர்கள் நம் நாட்டுக்கு வருவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே சிறந்த நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டு செம்மை நெறியில் ஒழுகி வந்த தமிழ்மக்களுக்கு, இடைப்பட்ட காலத்தில் ஆரியர்களால் கொண்டுவந்து புகுத்தப்பட்ட இந்துமதம் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல வென்பதை எடுத்துக்காட்டுதலே இக்கட்டுரையின் நோக்கமாகும், இதனைத் "திராவிடநாடு" பகுதி பகுதியாகத் தொடர்ந்து வெளியிட்டுவரும்.

இப்போது இந்துமதம் என்று வைத்து வழங்கப்பட்டு வரும் மதத்திற்குப் பலர் பலவாறு பொருள் கூறுகின்றனர். அவற்றுட் சில வருமாறு: "இந்தியாவில் உள்ளவர்களின் மதமாதலால் இந்துமதம்" என்றும்; (இதுமேனாட்டறிஞரான **மாக்ஸ்முலர்** என்பவரின் கருத்து) சிந்துநதிக் கரையில் ஆரியர்கள் தங்கியிருந்ததால், அவர்கள் இந்துக்கள் என்றும் இந்துமதத்தினர் என்றும் அழைக்கப்பெற்றனர் என்றும் பொருள் கூறுகின்றனர். ஆனால் மேற்சொன்ன இரண்டு காரணங்களும் பொய் என்பதை வலியுறுத்தி ஒரு உபநிடதம் அதன் உண்மைப் பொருளை விளக்கிக் காட்டுகின்றது. எப்படியெனில்,

"ஹிம்ஸாயாம் தூய தேயஸ:
ஸ: ஹிந்துரி த்யபீதயதே."

இதன் பொருள்:—எவன் ஒருவன் துன்பம் என்பதில் நின்று அல்லற்படுகின்றானோ அவன் இந்து என அழைக்கப்படுகிறான் என்பதாகும். எனவே, ஆரியர்கள் தங்களுக்கு இருக்க இடமும், உடுக்க உடையும், உண்ண உணவும் இன்றி ஊர்ஊராய்ச்சுற்றித் திரிந்து துன்புற்ற உண்மை பண்டைய வரலாறுகளால் வலியுறுவதால் அவர்களை இந்துக்கள் என்றுகூறும் உபநிடதக் கருத்தையே நாமும் உண்மையெனக் கொள்ளல் வேண்டும். அற்றன்று, ஆரியரல்லாத தமிழ்மக்களை இந்துக்கள் என்றழைப்பது பொருந்தாதோ வெனக் கடாவுவார்க்கும் பொருந்தாதென்றே கூறுவோம். ஏனெனில் தமிழ்மக்கள் தங்கள் வாழ்க்கையை நடாத்த வகையறியாது ஊர் ஊராய்ச் சுற்றித்திரிந்து துன்புற்றசெய்தி எந்த வரலாற்று நூலிலும் காண்பதற்கில்லை. மற்று, ஆரியர் அல்லற்பட்டு அலைந்து திரிந்து துன்புற்றமைக்குச் சான்று பலஉள. விரிவஞ்சி ஒன்றிரண்டை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டுதும். ஆரியர்களின் முதல் நூலாகிய இருக்குவேத முதன் மண்டிலத்தில் உள்ள 42-ம் பதிகத்தில் ஆரியர்கள் தங்கள் தலைவனான இந்திரனை நோக்கிப் பின்வருமாறு வேண்டிக்கொள்ளுகிறார்கள்.

(1) "யாங்கள் செல்வத்தை எளிதில் அடையுமாறு செய்.
(2) புல்லடர்ந்திருக்கிற மேய்ச்சல் நிலங்களுக்கு எம்மை வழிகாட்டிச் செலுத்து.
(3) எங்களுக்கு வயிறுநிறைய உணவு கொடு.
(4) சுவித்ராளின் இளங்கன்றே, ஓ மகவானே துக்கிரனுடைய வீடுகளிடையே எங்களுக்கு நிலம்கிடைத்தல்வேண்டி நடந்தபோரில் எங்களுக்கு உதவி செய்கின்றனை."

என்கின்ற இவ்விருக்குவேத உண்மைகள் ஆரியர்களின் மிடிப்பட்ட வாழ்க்கையைத் தெளிவாகக் காட்டுகின்றதாகையால், இந்துக்கள் என்று அழைப்பதற்கு ஆரியமக்களே உரித்தானவர்கள் என்பது தெற்றெனப் புலனாகின்றது.

இனித், தமிழ் மக்கள் இருக்குவேத காலத்திற்கு முன்பிருந்தே சிறந்த செல்வ வாழ்க்கையில் திளைத்திருந்தனர் என்பதற்கும் அவ்விருக்குவேதமே சான்று பகர்கின்றது. அவற்றிலும் ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுதும். இருக்குவேத முதல் மண்டிலம் 35-ம், 104-ம் பதிகங்களில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

(1) "பொன் அணிகளாலும் மணிக் கலன்களாலும் தம்மை ஒப்பனை செய்து கொண்ட அவர்கள் (தமிழர்கள்) இந்நிலத்தை மறைத்து ஓர் ஆடை விரித்தார்கள்.
(2) இந்நிலத்தின் கடைக்கோடி வரையில் ஊடுருவிப் பரவிநிற்கும் அவர்கள் (தமிழர்கள்) தம் மந்திர ஆற்றலால் இந்திரனை வெல்ல மாட்டாராயினர்.
(3) இந்திரன் தனது குலிசப் படையால் அவர் (தமிழர்) களுடைய கோட்டைகளைப் பிளந்து துகளாக்கினான்.
(4) குயவனுடைய மனைவியர் இருவரும் பாலிலே தலை முழுகுகின்றனர்! அவர்கள் சிபாயாற்றின் ஆழத்தில் அமிழ்த்தப் படுவாராக."

என்ற இவ்விருக்குவேத உண்மைகள் தமிழ் மக்களின் சிறந்த செல்வ வாழ்க்கையை நன்கு தெளிவுபடக் காட்டுவதோடு, தமிழ் மக்கள் எல்லாரும் செய்தொழில் வேற்றுமையால் உயர்வு தாழ்வில்லாமல் ஒரே தன்மையாய்த் தங்கள் செல்வத்தினாற் பெறக்கூடிய இன்பங்களை நுகர்ந்து வந்தனர் என்பது, "குயவனுடைய மனைவியர் பாலிலே தலைமுழுகினார்கள்" என்பதால் தெரியக் கிடக்கின்றது. என்றிதுகாறும் கூறியது கொண்டு **தமிழ் மக்கள் எக்காரணத்தைக் கொண்டும் இந்துக்கள் என்றோ இந்து மதத்தினர் என்றோ அழைக்கப்பட மாட்டார்கள்** என்பது யாதொரு ஐயுறவுமின்றித் துணியப்படும். எனவே, இதுகாறும் தமிழ்மக்களை இந்துக்கள் என்ற பேதையினோர் இனி அவ்வாறு அழைக்க மாட்டார்கள் என்பது ஒருதலை. [தொடரும்]

வந்தேனே! நானே!!

2-ம் பக்கத் தொடர்ச்சி.

"காரணம் ஆயிரமுண்டு, ஒன்று பாருங்கள். தென்னாட்டுக் காங்கிரசுக்காக ஒரு ஆச்சாரியார்தானே இங்கு வந்தார்?

"ஆமாம்"

"மற்றும், அதிலே எத்தனையோ தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் பார்ப்பன தாசர்கள்"

பெரியாருக்கும், சர். கிரிப்சுக்கும் இதுபோன்றுதானே பேச்சு நடந்திருக்கும்! சர். கிரிப்ஸ், காங்கிரசில் பார்ப்பனியம் தாண்டவமாடுவதைத் தெரிந்து கொண்டிருப்பார் என்பது திண்ணம்.

இந்த இலட்சணத்திலே குமாரமங்கலம் ஜெமீன்தாரும், மாஜி முதலமைச்சரும், பாரிஸ்டர் படிப்பும், மேனாட்டுப் பழக்கமும் பெற்ற சுப்பராயன் போன்றவர்களின் கதி இருக்கிறதென்றால், மற்றக் குப்பன் சுப்பனைக் கேட்பவர் யார்? எங்கே கிடந்தால்தான் என்ன? இதைக் கவனிக்காது, தோழர் குப்புச்சாமி, நான்தான் பார்ப்பனரல்லாதாருக்குப் பிரதிநிதி என்று கூறுகிறாரே, இந்தப் பித்தத்தைத் தமிழரே, தயவு செய்து தெளியவைக்க வேண்டாமா!

'மதனகாமராஜன்' என்ற தமிழ் படத்திலே, ஹாஸ்யநடிகர் தோழர் துரைராஜ், தாண்டவன் என்ற பாத்திரமாக நடிக்கிறார், பார்த்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். தோட்டத்திலே வேலைசெய்யும் தாண்டவனை, திமிர்பிடித்தக் குறும்பனொருவன், "நீர் ஓர் மன்னன் முற்பிறப்பிலே, இப்போதும், உன்து நாட்டுமக்களும் உனது மாஜிபட்டமகிஷியும் உன்வரவுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனர்" என்றுகூற, தாண்டவன் அதை நம்பி தலையிலே பானை சுற்றிக் கொண்டு, மண்வெட்டிக் காம்பை, செங்கோல் எனக் கொண்டு, ராஜநடை நடந்து, ராணியைக்காணச்செல்கிறான். தோழர் குப்புச்சாமியும், இனி, சர். கிரிப்சுக்குத் தந்த தந்தியைக் கையில் பிடித்துக்கொண்டு, "வந்தேனே! நானே! வண்மைத்தமிழரின் பிரதிநிதிதானே" என்று பாடிக்கொண்டும், வருவார்போலும்!! யார் கண்டார்கள் இன்னம் என்னென்ன நடக்குமோ!

## வீரர் கோட்டம்

மார்ச்சுமாதம் 3ந்தேதி. மலாய்பகுதியில், எதிரியிடம் போரிட்டுக்கொண்டிருந்த இந்தியவீரர். மனமோகனசிங் என்பார். மரணமுற்றார். இவர் இந்தியரில். விமான வீரதிலகமாக விளங்கிவந்தார். 1930ல். இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு விமானத்தைத் தனியாகச் செலுத்திவந்த தீரர். 1935 37ல். இங்கிலாந்திலிருந்து கிளம்பி விமானத்தை ஆப்பிரிக்க கேப்டவுன் செலுத்திச் சென்ற. ஆங்கிருந்து. பம்பாய் வந்து சேர்ந்த அஞ்சாநெஞ்சர் 1938ல் இவர் விமானப்பயிற்சி போதகாசிரியர் விருதுபெற்றார். 1940. ஆகஸ்ட் மாதம் R. A F. எனப்படும் பிரிட்டிஷ் விமானப் படையில் சேர்ந்து, இங்கிலாந்தில் சிலகாலமும் ஜிப்ரால்டரில். சிலகாலமும் பணியாற்றிவந்தார். 1941, டிசம்பரில், தூரக்கிழக்குப் பகுதிக்கு மாற்றப்பட்டு. அங்கு மாற்றருடன் போரிட்டு 1942 மார்ச்சில் உயிர் துறந்தார். மறைந்த மனமோகனரின் புகழ் மறையாது!


## இத்தாலிக்கு இடி.

தென்அமெரிக்க நாடான பிரேஜிலில். சாவ்பாலோ என்ற ஊரில் அச்சுநாட்டுக்காரர் மீது மக்களுக்கு ஆத்திரம் அதிகரித்து விட்டது ரோம் சக்கிரவர்த்தி அகஸ்டஸ் என்பவரின் சிலையொன்றை இங்கு முன்னம் அமைத்திருந்தனர் அது. முசோலினிதந்தது. இப்போது மேற்படி சிலையை அப்புறப்படுத்திவிட்டனர். தெருக்களுக்கெல்லாம் முன்பு அச்சுநாடுகளின் பெயர்கள் இடப்பட்டிருந்தன இப்போது அந்தப்பெயர்கள் எடுபட்டுவிட்டன அச்சுநாட்டு சப்மெரைன்களால் மூழ்கடிக்கப்பட்ட தென்அமெரிக்கக் கப்பல்களின் பெயர்கள் தெருக்களுக்கு வைக்கப்படுகின்றன.


பாஷா சாஹிப் என்கிற B. சையத் காசீம் சாஹிப்,

ஷராப் & நகை வியாபாரம், பெரிய காஞ்சிபுரம்.

நீண்டகாலமாக நாணயமும் நம்பிக்கையும் பொதுஜன நன்மதிப்பும் பெற்றது. எமது கடையில் தற்காலத்திற்கேற்ற புதிய மாதிரி சவரப்பொன் ஆபரணங்களும் வேலைப்பாடு அமைந்த எல்லா தினுசு வெள்ளிச் சாமான்களும், பஜார் விலைக்கு கூடியான வரை சகாயமாகவும் உத்திரவாதத்துடனும் கிடைக்கும்.



சகோதர சகோதரிகளுக்கு, தேவையான எல்லா விதமான ஆபரணங்களையும் குறித்த காலத்தில் குறைந்த கூலியில் சிறந்த முறையில் அனுபவம் வாய்ந்த தொழிலாளரைக் கொண்டு தயாரித்துக்கொடுக்கப்படும்.

தயவு செய்து ஒருமுறை ஆர்டர் கொடுத்து உண்மையை உணரவும்.


Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A at 51 Nimanthakara Street, L. Conjeeveram.